# GREAT MEN

## OF INDIA

## BOOK I

BY

S. S. ARUNAGIRI NATHAR,

Senior Tamil Pandit, T. T. V. High School, Mabras.

S. VASAN & CO.,

ƚANGAPURAM :: TINNEVELLY DT.,

AND

LAPORE :: :: MADRAS

*opyright]* *1946* *[Price* 0-10-0

# நம் நாட்டுப் பெருமக்கள்

## முதற் புத்தகம்

THE MADURA TAMIL SANGAM

சென்னை, தொண்டைமண்டல உயர்தரகலாசாலை
முது தமிழாசிரியர்
எஸ். எஸ். அருணகிரி நாதர்
எழுதியது

**எஸ். வாஸன் கம்பெனி,**

சமுகரங்கபுரம் :: திருநெல்வேலி ஜில்லா,

மயிலாப்பூர் :: மதராஸ்

ரிஜிஸ்டர் செய்தது] 1946 [விலை அணா 0-10-0

*1st Edition-1945*
*2nd „ -1946*

THE MADURA TAMIL SANGAM

Approved by the Text-Book Committoe, Madras.
Vide Fort St. George Gazette, **Part II Page** 18,
dated 14-5-1946.

Vinodan Press, 49, Jones Street. G. T. Madras.
S. Vasan & Co, P. I. C., M. S. 66

# முன்னுரை

சற்றேறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளாக யான் பொதுமக்களுக்காகவும், மாணாக்கர்களுக்காகவும் அறுபது புத்தகங்களுக்கு அதிகமாகவே எழுதியுள்ளேன். இதைத் தமிழ்நாட்டினர் அறிவர். பொருளைக் கருதி, 'ஏதோ ஒன்றை எழுதிவிடலாம்' என்று யான் ஒருபோதும் நினைத்ததில்லை. எழுதும் விஷயம் மக்களுக்குப் பயன்தரக்கூடியதாய் இருக்கவேண்டும் என்பதுதான் என்கருத்து. யாருக்காக எழுதப்படுகிறதோ அவர்களுக்கு அது முற்றும் பயன்படக்கூடியவகையிலேயே யான் எப்போதும் எழுதிவருகிறேன்.

"நம் நாட்டுப் பெருமக்கள்" என்னுந் தலைப்பின் கீழ் எழுதப்பட்டுள்ள இந்தப் புத்தகத்திற் காணும் இரு பெருமக்களின் வாழ்க்கைவரலாறுகள், சிறப்பாக நம் மாணாக்கர்களுக்கு நல்ல உணர்ச்சியையும், ஊக்கத்தையும் உண்டாக்கக்கூடும் என்பது என்துணிபு. ஒவ்வொருவர் வரலாறுகளிலும் மாணாக்கர்களுக்கு வேண்டிய பகுதிகளே சிறப்பாக விளக்கப்பட்டிருக்கின்றன; அவர்களுக்கு வேண்டாப் பகுதிகள் சில விடப்பட்டன. இப்புத்தகம் மாணாக்கர்கள்மனத்தில் தன்னம்பிக்கையையும், "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" வேண்டும் என்னும் எண்ணத்தையும், சிறப்பாக ஊக்கத்தையும் உண்டாக்கும் என்பது என்நம்பிக்கை.

எஸ். எஸ். அருணகிரிநாதர்

# பொருளடக்கம்

## 1. டாக்டர், ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தொடக்கம் | ... | 1 |
| 2. | பிறப்பு | ... | 6 |
| 3. | கல்வி கற்றல் | ... | 12 |
| 4. | தொழிலில் புகுதல்: சட்டப் படிப்பு | ... | 18 |
| 5. | சிறப்புள்ள நியாயவாதி | ... | 25 |
| 6. | அரசறிந்த மதிப்பு | ... | 30 |
| 7. | மனைவியின் பிரிவு | ... | 33 |
| 8. | டாக்டர் ஆவ் லாஸ் | ... | 38 |
| 6. | சிறப்புள்ள நீதிபதி | ... | 42 |
| 10. | உயர் குணங்கள் | ... | 45 |

# நம் நாட்டுப் பெருமக்கள்

—(0)—

## 1. டாக்டர், ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள்

---

### 1. தொடக்கம்

நமது நாட்டில் எத்தனையோ கோடி மக்கள் இதுவரையில் பிறந்தனர்; வாழ்ந்தனர்; இறந்தனர். அவர்களுள் ஒருசிலரைத் தவிர மற்றவர் அனைவரும் பிறந்ததும் இருந்ததும் இறந்ததும் உலகில் சிலருக்கும் தெரியாது. 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலில் தோன்றாமை நன்று' என்னும் வள்ளுவர்வாக்கியத்தை உள்ளவாறு அறிந்து புகழ்பெற நடப்போர் சிலரே யாவர். அவ்வாறு புகழ்பெற நடந்து தங்கள்நலத்தோடு நாட்டின் நலத்தையும் கருதி வாழ்ந்தவர்களே இறந்தும் இறவாதவராவர். அப்படிப்பட்டவர்களே எக்காலத்திலும் எவராலும் போற்றப்படுவார்கள்.

இத்தகைய சிறந்த குணம் வாய்ந்த மக்கள் பலர் நமது நாட்டில் முற்காலத்திலும் இருந்தனர்; பிற்காலத்திலும் வாழ்ந்தனர்; இக்காலத்திலும்

ஆங்காங்கு ஒவ்வொருவர் அருமையாக வாழ்கின்றனர். இப் பெருமக்களுள் ஒருவராகவைத்து எண்ணத்தகுந்தவர் டாக்டர், ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள். ஐயரவர்களின் பெருநோக்கத்தையும் பெரு வாழ்வையும் எண்ணி, மக்கள் அவரை அருமையாக **மணிஐயர்** என்று வழங்குவாராயினர். ஐயரவர்களின் தூய உள்ளத்தையும் பரிசுத்த வாழ்க்கையையும் அறிந்த பிற்காலத்தவர் அவரை **மகான் மணிஐயர்** என்றும் வழங்கலாயினர். ஆதலின், இனி நாமும் அவர் அருமை பெருமை தோன்ற, அவரை அப்பெயர்களால் வழங்குவோம். நம் ஐயரவர்களின் வாழ்க்கையைச் சுருக்கமாகவாயினும் நம் மாணுக்கர்கள் அறியவேண்டுமென்னும் நோக்கத்தோடு இந்நூலை எழுதத் தொடங்குவோம்.

நமது நாட்டு மாணுக்கர்களேயன்றிப் பெரியவர்களும் ஒருமுறையாவது மணிஐயர்வாழ்க்கைவரலாற்றைப் படிப்பது அவசியமே யாகும். இன்றும் எல்லாராலும் நன்கு மதித்துப் பாராட்டப்படும் ஸர். தி. முத்துசாமிஐயரைப்போலவே மகான் மணிஐயரவர்களும் தமது தூயஉள்ளம், இடைவிடாததன்முயற்சியைக் கொண்ட உழைப்பு, தன் னம்பிக்கை ஆகிய இவை காரணமாக முன்னேற்ற மடைந்தவராவர். பலர் பிறரால் பெரியவர்களாக்கப்படுகிருர்கள்; சிலர் தங்கள் முயற்சியிளுலேயே

முன்னேற்ற மடைகின்றனர். அவ்வாறு தங்கள் முயற்சியினால் முன்னேற்ற மடைந்த பெருமக்களுள் நம் மணிஐயரவர்களும் ஒருவராவர். ஆகலின், அவர்சரிதத்தை நம் மாணாக்கர்கள் படிப்பார்களாயின் ஊக்கமில்லாதவர்கள் ஊக்கத்தையும், ஊக்கமுள்ளவர்கள் மேலும் ஊக்கத்தையும் பெறுவார்கள் என்பது என் நம்பிக்கை.

எவ்வித முயற்சிக்கும் அடிப்படையாக வேண்டப்படுவது ஊக்கமே யாகும். ஊக்கமுள்ளவர் தங்கள்அறிவைத் தங்களுக்காகவும் உலகத்திற்காகவும் பயன்படுத்துகின்றார்கள். ஊக்கமில்லாதவர்களோ தங்கள்அறிவைத் தங்களுக்கே உபயோகித்துக்கொள்ள முடியாதவர்களாய் இருக்கின்றனர். எத்தனையோ அறிஞர்கள் ஊக்கமின்மை காரணமாகத் தங்கள்அறிவைப் பாழாக்குகின்றனர். பொன்னையோ வேறு பொருள்களையோ பாழ்படுத்துவது கூடாது என்று பலர் கூறுகின்றனர். பொன்னும் பொருளும் பாழ்படுத்தப்படுகிற அளவுக்குத்தான் பாழாகும். ஆதலின்,அவைகளைப் பாழ்படுத்துவது ஒரு பெருந்தீமை யாகாது. ஆனால், ஊக்கமின்மை காரணமாக ஒருவர் தமக்குள்ள அறிவைத் தமக்கும் உலகத்திற்கும் பயன்படுத்தாம லிருப்பாராயின், அதுவே நனி மிக வருந்துவதற் குரிய செய்கையாகும்.

உலகப்பிரசித்தி பெற்ற இரசாயனசாஸ்திரிகளான நம் ஸர். ஜகதீச சந்திரபோஸ் அவர்களும், ஸர். பி. ஸி. ரே அவர்களும், ஸர்.ஸி.வி. இராமன்அவர்களும் தங்கள் சிறந்த அறிவைத் தாங்கள் உபயோகப்படுத்தாமலிருந்திருப்பின், இப்போது அவர்களுக்கும் அவர்களால் நமது நாட்டுக்கும் ஏற்பட்டிருக்கும் புகழ் ஏற்பட்டிராதன்றோ! இந்தப் பெருமைக்குக் காரணம் என்ன? அவர்களிடம் இருந்த ஊக்கமே அன்றோ? நாம் மேலே கூறியவர்களிடம் ஊக்கமே இருந்திராவிடின், அவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை, புகழ் ஆகிய இவை ஏற்பட்டிருக்குமா? ஆதலின், பொன்னையும் பொருளையும் பாழ்படுத்துவதைப்பார்க்கினும், அறிவாளிகள் ஊக்கமின்மை காரணமாகத் தங்கள் அறிவைப் பாழ்படுத்துவது வருந்தத்தக்க செயலாகும்.

நமது வரலாற்றுத்தலைவராகிய மகான் மணிஐயரவர்களிடம் ஊக்கமும் பேரறிவும் உயர்ந்துநின்றன; நல்லெண்ணம், பரோபகாரம், சமரச நோக்கம், தேசாபிமானம் முதலியவைகள் சுடர்விட்டுப் பிரகாசித்தன. ஐயரவர்களைப்பற்றி என்னைப்போன்றவர்கள் எவ்வளவு கூறினும் சிறக்குமா! அமெரிக்காவிற்கும் உலகத்தில் மற்றெல்லா நாட்டுக்கும் சென்று, தமக்கும் நமக்கும் புகழை நிறுவியவராகிய சுவாமி விவேகானந்தர், ஐயரவர்களைப்பற்றி, 'ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐய-

ரவர்கள் இந்தியாவின் உண்மைத் தவப்புதல்வர்' என்று சொல்லியிருப்பது மற்றவர்கள் ஐயரவர்-களைப்பற்றிக் கூறியிருக்கும் புகழுரைகளுக்கெல்-லாம் ஒரு கிரீடம் வைத்ததைப்போ லிருக்கின்றது.

சுவாமி விவேகானந்தர் நம் நாட்டவர். அவர் கூறியதை விட்டுவிடுவோம். "லார்டு ஆம்தில்" என்பவர் ஓர் ஐரோப்பியர்; ஆளும் இனத்தைச் சேர்ந்தவர்; சென்னை கவர்னராய் இருந்தவர். அவர் நம் ஐயரவர்களைப்பற்றிக் கூறியிருக்கும் புகழ்-மொழிகளுட் சிலவற்றையாவது கவனியுங்கள்: "அவர் (மணிஐயர்) கௌரவம் மிகுந்த ஆத்மா; தன்னலம் அற்றவர்; தமது சலியாத உழைப்பைப் பொதுமக்களுக்காகவே பயன் படுத்தியவர்; தாராள மனப்பான்மை யுடையவர். அவரை ஓர் இந்தியப் பெருமகன் என்று நான் சொல்லுகிறேன். அவர்-வாழ்க்கை எல்லாருக்கும் முன்மாதிரியாய் இருக்கின்றது. வாய்மை, ஒழுங்கு, பெருந்தன்மை முதலி-யன அவரிடம் சிறந்து காணப்படுகின்றன". இப்-படி இன்னும் பலவாறு ஐயரவர்களைப்பற்றி லார்டு ஆம்தில் புகழ்ந்து கூறியுள்ளார்.

ஐரோப்பியர்கள் செய்வதெல்லாம் சரியென்-றோ, அவர்கள் ஒழுகுகிற வழிகளையெல்லாம் பின்-பற்றவேண்டுமென்றோ கூறுகிறவரல்லர் நம் ஐய-ரவர்கள். ஆங்கிலேயர்கள் தவறு செய்தவழி அத்

தவறுகளை ஐயரவர்கள் எத்தனையோ முறை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அப்படியிருந்தும், லார்டு ஆம்தில் ஐயரவர்களை இவ்வாறு புகழ்ந்திருக்கிறா ரென்றால், ஐயரவர்களின் உயர்நிலை எத்தகையதாய் இருந்திருக்க வேண்டுமென்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாமன்றோ !

இனி, தளரா ஊக்கமும் உலையா உழைப்பும் உத்தமப்பண்பும் நிறைந்த ஐயரவர்களின் வரலாற்றை அறியப் புகுவோம்.

---

## 2. பிறப்பு

“சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்
சவுந்தர பாண்டியன் எனுந் திரு நாடனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கும்”

பாண்டியவளநாட்டின் தலைநகரம் மதுரை. தமிழ்மொழியைத் தங்கள் உயிரினுஞ் சிறந்ததாக எண்ணி வளர்த்த பாண்டியமன்னர் பலரும், கூலவாணிகன் சாத்தனார், கணக்காயனார்மகனார் நக்கீரனார் போன்ற பெரும்புலவர்களும், இத் தலைநகரத்தில் தனிச்சிறப்புற்று விளங்கினார்கள். மதுரைமாநகரத்தின் பெருமைக் கேற்ப அந் நகரத்தில் அன்றுமுதல் இன்று-

வரையிலும் ஒவ்வொரு வகையில் சிறப்புப்பெறும் பெருமக்கள் பலர் அடிக்கடி தோன்றி வாழ்ந்திருக்கின்றார்கள். இவ்வாறு தோன்றிய பெருமக்களுள் நம் மகான் மணிஐயரும் ஒருவ ராவர்.

மணிஐயரவர்கள் செல்வம் சிறந்த குடும்பத்தில் பிறக்கவில்லை; ஒன்று மில்லாத ஏழைக்குடும்பத்திலும் தோன்றவில்லை. அவர் நடுத்தர வாழ்க்கை உள்ள குடும்பத்தில் தோன்றினர். செல்வக் குடும்பத்திற் பிறந்த பலர் சிறப்படையாமல் போவதையும், நடுத்தரக்குடும்பத்திலும் ஏழைக்குடும்பத்திலும் தோன்றிய பலர் சிறப்புற வாழ்வதையும் நாம் நம் கண்ணெதிரில் காண்கின்றோம்.

ஐயரவர்கள்தம் தகப்பனரும் பாட்டனரும் நற்குணமும் நல்வாழ்வும் வாய்ந்தவர்கள். அவர்கள் 'சிறந்தவர்கள்; கண்ணியமானவர்கள்' என்றே எல்லாரிடத்திலும் பெயரெடுத்தார்கள். நல்லது என்றும், சரி என்றும் தோன்றிய எந்தக் காரியத்தையும் செய்வதற்கோ சொல்வதற்கோ, அவர்கள் பின்வாங்கியதே இல்லை. இந்தப் பரம்பரைநற்குணம் நம் மணிஐயரவர்களிடத்திலும் நன்றாகப் பதிந்திருந்தது.

மக்கள் நல்லவர்களாகவோ தீயவர்களாகவோ விளங்குவதற்கு, அவர்களுடைய தகப்பனர், பாட்டனர் முதலியவர்களின் குணங்களும் செயல்களும்

ஒருவாறு துணையாகின்றன. ஆதலின், தங்கள்-பரம்பரையில் தோன்றுபவர்கள் நல்லவர்களாய் விளங்கவேண்டுமென்று நினைக்கின்றவர்கள், தாமும் நல்லெண்ண முள்ளவர்களாய் வாழ-வேண்டும்.

மணிஐயருடைய பாட்டனார்பெயர் இராம-சாஸ்திரியார் என்பது; தகப்பனார்பெயர் சுப்பையர் என்பது. சுப்பையர் என்பவர் மிக்க நாணயஸ்தர்; பரோபகாரகுணம் வாய்ந்தவர்; நிலையான தரு-மங்களைச் செய்யவேண்டுமென்னும் விருப்ப முள்ள-வர். அவர், தாம் நல்ல வழியிலே தேடிய பொருளைக்-கொண்டு, மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயத் திலும் பிற தலங்களிலும் சில கைங்கரியங்களைச் செய்திருக்கின்றார். இத்தகைய நற்குணம் வாய்ந்த சுப்பையரவர்கள் தமது கருத்துக்கேற்ற கன்னி-கையை மணஞ் செய்துகொண்டு இல்லறவாழ்க்-கையை இனிது நடத்திவந்தார். அவருக்கு அம் மனைவியாரிடத்தில், சிறப்புடன் விளங்கிய இராம-சாமி, சங்கரன் என்னும் இரண்டு குமாரர்கள் பிறந்து, சிறப்பாக வளர்ந்தனர். சிலகாலம் சென்ற பின்னர், சுப்பையருடைய மனைவியார், தம் அரு-மந்த புத்திரர்களையும் சிறப்பு வாய்ந்த கணவரையும் விட்டு மேலுலகம் அடைந்தார்.

கலங்காத மனமுள்ள சுப்பையர் மனங்கலங்-கினார். சிறிது காலஞ் சென்றது. காலம் அவர்-

துயரத்தை ஆற்றியது. குடும்பத்தைச் சிறப்புற நடத்துவதற்காக அவர் மறுமணம் செய்துகொள்ள வேண்டியவ ராஞர். ஆகவே, அவர் தக்கதோர் இடத்தில் தகுந்தவொரு கன்னியைத் தேடி மணம் செய்துகொண்டார். இவ் வம்மையாரும் ஐயருடைய முதல்மனைவியாரைப்போலவே மிகச் சிறந்த குணம் வாய்ந்தவராய் விளங்கிஞர். இவ்வம்மையா-ரிடத்தில்தான் நம் வரலாற்றுத்தலைவராகிய டாக்-டர் மணிஐயர் (ஸர்,.மணிஐயர்—ஜட்ஜ் மணி ஐயர்-தேசாபிமானி மணிஐயர்—மகான் மணிஐயர்) என்று அறிவாளர்களால் புகழப்பெற்ற நம் மணி-ஐயரவர்கள் கி.பி. ஆயிரத்து எண்ணூற்று நாற்பத் திரண்டாம் ஆண்டு அக்டோபர்மாதம் முதல்தேதி-யன்று தோன்றிஞர். அவர் பிறந்த தினத்தன்று, " இனி வாராது " என்று விட்டுவிட்ட பணத்தை, கடன் வாங்கியவர் திரும்பக்கொண்டுவந்து கொடுத்-தாராம் !

குழந்தைக்கு என்ன பெயரிடுவது என்று எண்ணினர். சுப்பையருக்குமுன்ஞேர்களுள் ஒருவ-ராகிய சுப்ரமணியஐயர்என்பவர் மிக்க சிறப்புடன் வாழ்ந்துவந்தாராம். ஆகலின் அவர்பெயரையே சுப்பையர், தமது குழந்தைக்கும் வைத்தார். சுப்பைய ரவர்களுக்கும் சுப்பிரமணியசுவாமியினிடம் மிக்க அன்பு உண்டென்றும், அதஞலேயே அவர் தம் இரண்டாம் மனைவியினிடம் பிறந்த குழந்தைக்-

காவது அந்தத் தெய்வத்தின் பெயரை இடவேண்டு மென்று தீர்மானித்துச் சுப்பிரமணியம் என்று பெயர்வைத்தா ரென்றும் கூறுவர். இது எப்படி ஆயினும் ஆகுக. சுப்பையரவர்கள் தம் இரண்டாம் மனைவி பெற்ற குழந்தைக்குச் சுப்பிரமணியம் என்று பெயரிட்டு, அக் குழந்தையை அன்போடு வளர்த்துவருவாராயினர். தாயாரும் தம் அருமருந் தன்ன மணியை அன்புடனும் ஆதரவுடனும் வளர்த்துவந்தார். குழந்தை மணியைப் பார்த்த பாட்டிமாரும், அறிஞரும், பிறரும் "இக்குழந்தை பிற்காலத்தில் பலரும்புகழ நன்றாக வாழ்வான்" என்று கூறுவார்களாம். சாமுத்திரிகா லட்சண சாஸ்திரத்தில் தேர்ந்த பலர் இன்றைக்கும் ஒருவரைப் பார்த்தவுடன், 'இவர் இத்தகைய குணமுள்ளவராய் இருப்பார்; அதனால், இத்தகைய வாழ்க்கையை யுடையவராய் இருப்பார்' என்று கூறுகின்றார்கள். அவர்கள் கூறுவது பெரும்பாலும் சரியாக இருப்பதையும் நாம் காண்கின்றோம்.

தமது குழந்தை மணி, பிற்காலத்தில் பெருவாழ் வெய்துவது திண்ணம் என்பதை உணர்ந்த தாயார் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவே இல்லை.

தாயாரும் தந்தையாரும் குழந்தை மணியைத் தங்கள் கண்மணியைப்போலக் கருதி வளர்த்துவந்தார்கள். மணியும் மணிபோல் நல்ல ஒளி பெற்று

நன்கு வளர்ந்துவந்தான். மணிக்கு மூன்று வயதாயிற்று. அப்போது, நடுக்கடலில் செல்லுங் கப்பலுக்குத் திடீரென்று புரை (தொளை) ஏற்பட்டது போல, சமுசாரமாகிய கடலில் சென்றுகொண்டிருந்த கப்பலாகிய சுப்பையர் நோய்வாய்ப்பட்டார். எவ்வளவோ சிகிச்சை செய்தும் குணமடையாமல், சுப்பையர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்! அவர்பிரிவு அவர்குடும்பத்துக்குப் பெரிய கலக்கத்தையும் கவலையையும் உண்டாக்கியது. சுப்பையரின்மனைவியார், தம் கணவரின் பிரிவைச் சகியாது வருந்தியபோதிலும், குழந்தை மணியின் முகத்தைப் பார்த்துப் பார்த்து ஒருவாறு மனந் தேறலானார். ஆயினும், 'தகப்பனில்லாக் குழந்தையின் கதி பிற்காலத்தில் என்ன வாகுமோ!' என்று எண்ணிக் கவன்றார்.

இங்கு ஓர் உண்மை அறிதற் குரியது. பொதுவாகத் தாய்தந்தையரை, அல்லது அவர்கள் இருவருள் ஒருவரை, இளம்வயதில் இழக்குங் குழந்தைகள் துன்பமடைகின்றார்கள் என்று பலர் கருதுகின்றனர். ஆயின், துன்பமடைந்தாலும் அத்தகைய குழந்தைகளுட் பலர் பிற்காலத்தில் சிறப்படைகின்றனர் என்பதுமட்டும் திண்ணம். இதற்குப் பல பெருமக்களின் சரித்திரங்களே போதிய சான்றுகளாய் விளங்குகின்றன. நமது தமிழ்நாட்டில் சிறந்து விளங்குங் காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியார் தம் தாயின் வயிற்றி லிருந்தபோதே

தந்தையை இழந்தார். பிற்காலத்தில் அவர் அடைந்த பெருமைக்கு அளவே இல்லை. அவர் வைத்த பெரும்பொருளைக் கொண்டு இன்று சென்னையில் ஒரு 'காலெஜ்' நடைபெறுகிறது. திருவாரூர் ஸர். தி. முத்துசாமிஐயர் தம் இளம்பருவத்திலேயே தம் தந்தையை இழந்தார்; பிற்காலத்தில், ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டுத் தென்னிந்தியாவில் இருந்த நம்மனோர் எவரும் அடையாத சென்னை 'ஹைகோர்ட்' நீதிபதிப்பதவியை அடைந்தார்; தலைமைநீதிபதியாயும் இருந்தார். அவரது உருவச்சிலை வெண்ணிறச் சலவைக்கல்லினால் செய்யப்பட்டு, 'ஹைகோர்ட்'டினுள் வைத்துப் பாராட்டப்பட்டுளது. அதனை இன்றும் காணலாம்.

## 3. கல்வி கற்றல்

"தாயோடு அறுசுவைபோம், தந்தையொடு கல்விபோம்" என்று சொல்வது நெடுங்கால வழக்காகும். தாயோடு அறுசுவை போகலாம். பெரும்பாலும் தந்தையொடு கல்வி போய்விடுகிறதில்லை. நம் மணிஐயரவர்கள் தந்தையை மிக்க இளம்பருவத்தே இழந்தவர்களானாலும், கல்வியில் மிக உயர்ந்து விளங்கினார்கள் அன்றோ!

மணிஐயர் பல காரணங்களை முன்னிட்டு, எட்டு வயதுவரை எந்தப் பள்ளிக்கூடத்தையும் எட்டிப் பார்க்கவில்லை. அவ்வாறு பள்ளிக்கூடத்திற்குப் போகாதிருந்த அவர், தம்முடைய ஒன்பதாவது வயதில், அடங்கா மகிழ்ச்சியோடு படிப்பதற்காகப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றார். அவர் பள்ளிக்கூடத்திற்குச் செல்லுமுன்னரே ஆங்கிலமொழிக்குரிய எழுத்துக்களைக் கற்றிருந்தார். இதனால், அவருக்குக் கல்வியில் இருந்த ஊக்கம் மிக அதிகமென்பது தெரியவருகின்றதன்றோ!

அக்காலத்தில் ஆங்கிலக்கல்வியை அரைகுறையாகக் கற்றவர்களும் நல்ல வருவாயும் மதிப்பும் பெற்றனர். ஆகலின், ஐயரவர்களைச் சேர்ந்தவர்கள் அவரை ஆங்கிலக் கல்வியைக் கற்க விடுத்தனர். ஐயரவர்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்ற போதிலும், தமது மரபுக்குரிய ஒழுக்கத்திலிருந்து எள்ளளவும் தவறாத மகானவர். நம் பழக்கவழக்கங்களையும் நாகரிகத்தையும் கைவிடாமல், காலத்துக் கேற்ற கல்வியைக் கற்றுச் சிறந்து விளங்குவது எல்லாருக்கும் எளிதன்று; மனவுறுதி உள்ளவர்களுக்கே ஆகக் கூடியது. எதில் அதிகமாகப் பழகுகிறார்களோ, அதில் தங்கள் மனத்தைப் பறிகொடுக்கிறவர்களே மக்களுட் பலராவர். அன்னார் தங்களுக்கென்று ஒரு கொள்கையும் இல்லாதவர்களாவர்.

ஐயரவர்கள் முதலில், ஒரு பாதிரியாரால் நடத்தப்பட்ட "மிஷன்" பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கலானார். அந்தப் பள்ளிக்கூடத்தில் நமது நாட்டுமொழிமட்டும் கற்பிக்கப்பட்டது. ஆனால், ஐயரவர்களுக்கு நமது நாட்டுமொழியோடு ஆங்கில மொழியையும் கற்கவேண்டுமென்னும் அவா மிகுதியாய் இருந்தது.

அக்காலத்தில் மதுரையில் கிருஷ்ணசாமி செட்டியார் என்னும் வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் பரோபகார சிந்தை உள்ளவர்; கல்விக்கு உழைப்பதே நாட்டுக்கு உழைப்பதாகும் என்று எண்ணிய நல்லார். கிருஷ்ணசாமி செட்டியார் தமது சொந்தச் செலவில் நாட்டுக்கல்வியோடு ஆங்கிலக்கல்வியும் போதிப்பதற் குரிய ஆரம்பபாடசாலை ஒன்றை ஏற்படுத்தினார். இவ்வாறு மக்களின் கல்வியபிவிருத்திக்காக ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்திய செட்டியாரவர்களை மக்களனைவரும் போற்றினார்கள். கல்விவளர்ச்சிக்காக உழைக்கும் மக்கள் என்றைக்குமே போற்றுதற்குரியவர்க ளாவார்களன்றோ! கல்வி வளர்ச்சிக்காக உழைக்கிறவர்கள் நாகரிகவளர்ச்சிக்காகவும் உழைப்போராவர்.

நம் ஐயர், தாம் படித்துக்கொண்டிருந்த மிஷன்-பள்ளிக்கூடத்தைவிட்டு விலகி, கிருஷ்ணசாமி-செட்டியார்அவர்கள் ஆரம்பித்த பாடசாலையில்

சேர்ந்து, நாட்டுமொழியோடு ஆங்கிலத்தையும் கற்கலானார். சிலகாலம் ஐயர் அந்தப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றுகொண்டிருந்தார். கற்கும்போது கல்வியில் ஐயருக்கு இருந்த அக்கறை, அவரோடு படித்த வேறு எந்தச் சிறுவர்களுக்கும் இல்லை என்று சொல்லலாம். கிருஷ்ணசாமி செட்டியார்-பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டியவற்றைப் படித்த பின், மேலும் படிப்பதற்கு வேறு பள்ளிக்கூடத்-திற்குப் போக வேண்டியவரானார். அந்தச் சமயத்-தில், ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தாறுவது ஆண்டில், ஆங்கிலக் கல்வியை நன்றாகக் கற்பிப்-பதற்காக ஜில்லாப்பள்ளிக்கூடம் மதுரையில் ஏற்-பட்டது. உடனே, நம் ஐயர் அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து, தமது விருப்பம்போல ஆங்-கிலக்கல்வியை நாட்டுமொழியோடு கற்கலானார். பள்ளிக்கூடத்தில் அவர் சிறப்பாக நடந்துகொண்-டார்; கல்வியில் தமது முழுக்கவனத்தையும் செலுத்தினார். மணி ஐயர் ஜில்லாப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்தபோது "மிஸ்டர் வில்லியம்ஸ்" என்பவர் அதன் தலைமைஆசிரியராய் இருந்தார். அவர், மணிஐயரை அவர்திறமைக் கேற்ற வகுப்பில் சேர்த்து, அவருடைய கல்வியில் கண்ணுங் கருத்து-மாய் இருந்தார்.

மணி ஐயரோ தம் ஆசிரியரிடத்தில்,

" அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொ(டு)
எத்திறத் தாசான் உவக்கும் அத்திறம் "

நடந்துவந்தார்.

இதுமட்டு மன்று. அவர் தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்கு,

" பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப்பிற் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் " போவாராயினர்.

படிக்கும்போது அவர்,

"...............................வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினுதல் வினுயவை விடுத்தல் "

முதலியவைகளை நன்கு கவனித்துவந்தார்.

இவ்வாறு அக்கறையோடு கல்வியைக் கற்று வந்ததனால் ஐயர்கல்வி வளர்பிறையைப்போல விருத்தி அடைந்தது. அதனால், அவர், ஜில்லாப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்த அதே வருடத்தின் இறு-

தியில் நடந்த பரீட்சையில் முதல்வராகத் தேர்ந்தார். இதனாலும், அவருக்குக் கல்வியில் இருந்த ஆசை-யும் அக்கறையும் எவ்வளவு என்பது தெளி-வாகும். ஐயரவர்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற காலத்தில், கல்விசம்பந்தமாகப் பல பரிசுகளைப் பெற்றார். அவைகளுள் ஒன்று "சேம்பர்ஸ் டிக்ஷ்னரி" என்பதாகும். இது ஐயரவர்களுக்கு, அக்-காலத்தில் கல்விஇலாகாத் தலைவராய் இருந்த "ஸர். அலக்ஸாண்டர் அர்பத்நட்" அவர்களால் அளிக்கப்பட்டது.

ஐயரவர்கள் மேலும்மேலும் திறமையாகக் கற்பதைக் கண்ட அதிகாரிகள், அவர்திறமையை மெச்சி அவருக்கு உபகாரச்சம்பளம் கொடுத்து அவரை உற்சாகப்படுத்தினர். இவ்வாறு ஐயரவர்-கள் உபகாரச்சம்பளம் வாங்கியும், பல பரிசுகளைப் பெற்றும், பலரால் 'புத்திசாலி' என்று புகழப் பட்டும் வருவதைக் கண்ட அவர்தாயார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்பது பொய்யாமொழியே யன்றோ?

ஐயரவர்கள் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்-தொன்பதாம் ஆண்டுவரையில் ஜில்லாப்பள்ளிக்-கூடத்தில் படித்தார்கள். அவ்வருடத்தில் நடந்த பள்ளிக்கூட இறுதிவகுப்புப் பரீட்சையில் ஐய-

ரவர்களே முதல்வராகத் தேர்ந்தார்கள். அதனேடு ஜில்லாப்பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய படிப்பு முடிந்தது. மேற்படிப்புப் படிக்க வேண்டுமானல், அக்காலத்தில், சென்னைக்குத்தான் செல்ல வேண்டும். ஐயரவர்கட்குச் சென்னைக்குச் சென்று எப்படியாவது படிக்கவேண்டுமென்பது விருப்பம். பல காரணங்களால் அவர் அப்போது சென்னைக்குச் செல்ல முடியாதவ ரானர். அவருடைய தாயாருக்கும் அவரை விட்டுப் பிரிய மனமில்லை. ஐயரவர்களும் தம் தாயார் விரும்புகிறவரையில், அவரை விட்டுப் பிரிய மனமில்லாதவரா யிருந்தார்கள்.

---

## 4. தொழிலில் புகுதல்—சட்டப் படிப்பு

ஐயரவர்கள் அரசாங்கத்தார் நடத்திய பரீட்சையில் தேர்ச்சிபெற்ற பிறகு, நாம் மேலே கூறிய காரணத்தால், ஏதாவதொரு நல்ல வேலை பார்க்க வேண்டியவ ரானர். ஆனல், கிடைத்த வேலைகளையெல்லாம் மேற்கொள்ள ஐயரவர்கள் விரும்பவில்லை. தம்முடைய அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்றதொரு வேலையையே அவர் எதிர்பார்த்தார். மேலும் மேலும் தாம் முன்னேற்ற மடைவதற்கான வேலையாய் இருக்கவேண்டுமென்று அவர் கருதினர்.

ஐயரவர்கள் நினைத்ததுவே சரி. இக்காலத்தில் கல்வியில் தேர்ச்சிபெற்ற பிள்ளைகளுள் பெரும்பாலாரின் மனத்தில் இந்த எண்ணம் உதிப்பதே இல்லை; ஏதோ கிடைத்த வேலையில் புகுந்துவிடுகிறார்கள். அது அவர்களின் இயற்கைத்தன்மைக்குப் பொருந்தியதாய் இல்லாவிடில் துன்பப்படுகிறார்கள். அதனால், அந்த வேலையில் அவர்கள் சிறப்படைவதில்லை. சிறப்படையாவிடில், அவர்கள், திறமை அறிவு முதலியவைகளை உடையவர்களாய் இருந்தும், சாதாரணமானவர்களாகவே காணப் படுகிறார்கள். ஆதலின், கற்றவர்களாயினும் சரி, கல்லாதவர்களாயினும் சரி, ஒவ்வொருவரும் தங்கள் இயற்கைத்தன்மைக்கு ஏற்ற தொழில் துறைகளிலே புகுவார்களாயின் சிறப்படைவார்கள். அதனால்தான் ஐயரவர்கள் தங்கள் இயற்கைத்தன்மைக்கு ஏற்ற வேலையை எதிர்பார்த்தார்கள். அவர்கள் முன்னேற்ற மடைந்தமைக்கு இஃது ஒரு முதன்மையான காரணமாகும்.

தங்கள் விருப்பப்படி அவர்களுக்கு மதுரை டிப்டி கலெக்டர் ஆபீஸில் ஒரு குமாஸ்தாவேலை கிடைத்தது. அவ் வேலையை அவர்கள் மிக நன்றாகக் கவனித்து, தமது மேல்அதிகாரிகள் மெச்சும்படி நடந்துவந்தார்கள். இப்படி இருக்கையில், டிப்டி கலெக்டர் இராமராவ் என்பவரை அரசாங்கத்தார் மதுரையிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்றினார்கள். இராமராவ் இராமநாதபுரத்திற்குச்

சென்றபோது, தமக்குப் பிரியமான நம் மணி-ஐயரவர்களையும் தம்மோடு இராமநாதபுரத்-திற்கு அழைத்துக்கொண்டுபோனார். மணிஐயர் சிறிதுகாலம் இராமநாதபுரத்தில் மகிழ்ச்சியோடு வேலை செய்துகொண்டிருந்தார்; பிறகு, தம் தா-யார் முதலானவர்களை விட்டுப் பிரிந்திருக்க விரும்-பாததனாலும், இராமநாதபுரத்தில் தமக்குப் பழக்க மானவர்கள் இல்லாததனாலும், மதுரையில் தாம் முன்னே செய்துகொண்டிருந்த வேலைக்கே வந்து சேர்ந்தார்; அந்த வேலையில் சிலகாலம் இருந்தார்.

"அகழியில் விழுந்த முதலை அதுவே சுவர்க்கம்" என்றிருப்பதுபோல, சிலர் தாங்கள் அடைந்த அற்பத்தொழிலிலேயே காலத்தை-யெல்லாம் கழித்துவிடக் கருதுவார்கள். நம் ஐயரவர்கள் அப்படிக் கருதக்கூடியவரல்லர். ஆகலின், டிப்டி கலெக்டர் ஆபீஸில் குமஸ்தா-வாக என்றும் இருக்க அவர்கள் விரும்பவில்லை. அதனால் வேறு என்ன செய்யலாம் என்று நினைத்தார்கள். அக்காலத்தில் வக்கீல்தொழிலில் எல்லாருக்குமே நல்ல மதிப்போடு அதிக வருமான-மும் இருந்தது. ஆகலின், ஐயரவர்கள் தாமும் அந்தத் தொழிலைச் செய்யலா மென்று தீர்மானித்-தார்கள். அப்படியானால், அதற்குச் சட்டப்-பரீசையில்தேரவேண்டுமல்லவா? ஐயரவர்களுக்குப் படிப்பதும் பரீட்சையில் தேர்வதும் ஒரு பெரிய காரிய மன்று. ஆகலின், ஐயரவர்கள் சட்டப்-

புஸ்தகங்களைப் படித்து, அரசாங்கத்தாரால் நடத்தப்பட்ட சட்டப்பரீட்சைக்குச் சென்று எழுதினார்கள்.

எல்லா மாணாக்கரின் பரீட்சைவிடைத்தாள்களையும் அப்போது சென்னை ஹைகோர்ட்ஜட்ஜ்பதவியி லிருந்த ஆங்கிலேயர் ஒருவர் பரிசீலனை செய்தார்.

சில நாட்கள் சென்ற பின்னர், பரீட்சையின் முடிவு வெளியிடப்பட்டது. ஐயரவர்களே முதலாமவராக விளங்கினார்கள். பரீட்சையில் தேர்ந்ததும் ஐயரவர்கள் உடனே வக்கீல்தொழிலை மேற்கொள்ள முடியவில்லை.

காற்றடைக்கப்பட்ட நல்ல பந்தை நாம் எவ்வளவு வேகமாக அடிக்கிறோமோ அவ்வளவு வேகமாக அது மேலோங்கி எழுகிறது. அதுபோல் முயற்சியாளருக்கு வரும் இடையூறு அவர்களின் முயற்சியைப் பின்னும் அதிகப்படுத்தும்.

வக்கீல்பரீட்சையில் தேர்ந்தவர்கள் வக்கீல்தொழிலை நடத்துவதற்குமுன், அதற்கு, "சன்னது" என்னும் அரசாங்கமுத்திரையோடு கூடிய சாசனத்தைப் பெறவேண்டும். அத்தகைய சன்னதைக் கொடுப்பதற்குரிய உரிமை ஆங்காங்குள்ள நியாயஸ்தலங்களில் இருக்கும் நீதிபதிகட்கு இருந்தது. அதைப் பெற்றபிறகே, அல்லது அந் நீதிபதியிடம் அனுமதியைப் பெற்ற பிறகே, வக்கீல்-

தொழில் நடத்தலாம். நம் ஐயரவர்கள் வக்கீல்-பரீட்சையில் தேர்ந்தபோது மேலே கூறப்பட்ட சன்னதைக் கொடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தவர் மதுரையில் ஜில்லா ஜட்ஜாயிருந்த "காட்டன்" என்பவர். தமக்கு, சன்னதைத் தரவேண்டுமென்று ஐயரவர்கள் அவரிடத்தில் மனுச் செய்து கொண்டார்கள். ஆனால், அந்தத் துரை, ஐயரவர்கள் முதன்முதல் பார்த்தபோது தமக்கு மிக்க வணக்கமாகச் "சலாம்" செய்யவில்லை யென்றும் அதனால், தாம் அவரைத் தம் "கோர்ட்"டில் வக்கீல்தொழிலை நடத்த அனுமதிக்க முடியாதென்றும் ஐயரவர்கள் கோர்ட்டைவிட்டு வெளியே போக வேண்டுமென்றும் கூறி, தமது பிடிவாதத்தை நிலை நாட்டினர். ஐயரவர்கள் ஒன்றும் சொல்லாமல், "பொறுத்தவர் பூமியாள்வார்" என்று எண்ணிக் கொண்டு, தாம் விடாமல் பார்த்து வந்த டிப்டி-கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தாவேலைக்கே சென்றார்கள். சில காலம் ஆயிற்று.

மதுரையில் "பப்ளிக் பிராசிகியூட்டர்" வேலை ஒன்று அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டது. ஐயரவர்கள் வக்கீலாக இல்லாவிட்டாலும் திறமை உள்ளவர் என்று எல்லாருக்கும் தெரிந்திருந்தது. ஆதலின், அப்போது ஜில்லா கலெக்டராய் இருந்தவர் அந்தப் பப்ளிக் பிராசிகியூட்டர்வேலையைச் செய்வதற்கு ஐயரவர்களை நியமித்தார். அப்பொழுது

தமது வேலை காரணமாக ஐயரவர்கள், தம்மீது வெறுப்புற்றிருந்த ஜில்லாஜட்ஜின் கோர்ட்டுக்குப் போகவேண்டியவரானார்கள். காட்டனுக்கும் ஐயரவர்களுக்கும் ஒருமைப்பாடில்லை. அதனால், ஐயரவர்கள் வேறு வேலையைத் தேடிக்கொள்ளலாமா என்றும் நினைத்தார்கள். ஆனால், சட்ட சம்பந்தமான வேலைதான் அவர்களுக்கு விருப்பமான வேலை. அதனாலும், வேறு வேலைக்குப் போனால் அந்த வேலையில்மட்டும் துன்பம் ஏற்படாது என்பதற்கு என்ன ஆதாரம் என்று எண்ணியதனாலும், ஐயரவர்கள் சட்டத்தொழிலிலேயே செல்ல விரும்பினார்கள்; அதற்கான வழி வகைகளை நன்கு யோசித்தார்கள். சிறிது படிப்போடு சிறு வக்கீலாய் இருப்பதைப்பார்க்கிலும் அதிகமாகக் கற்றுப் பெரிய வக்கீலாய் விளங்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அந்தக் காலத்தில் எல்லாப் பரீட்சைகளுக்கும் பள்ளிக்கூடத்தில் படித்துத்தான் விடை எழுதவேண்டும் என்னும் கட்டாயம் இல்லை. ஆதலின் ஐயரவர்கள் தாம் உயர்தர வக்கீலாக வேண்டும் என்னும் ஒரே நோக்கத்தோடு படித்து ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தைந்தாம் ஆண்டில் "மெட்ரிக்குலேஷன்" பரீட்சையில் தேர்ந்தார்கள். மறுபடியும் அதே வேகத்தில் படித்து ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தாறுவது ஆண்டு எப். ஏ. பரீட்சையில் தேர்ந்தார்கள். அந்தக் காலத்தில் எப். ஏ. பரீட்சையில் தேர்ந்தவுடன் "பாச்சலர்-ஆவ்-லா அல்லது பி. எல்." என்னும் உயர்தர

வக்கீல் பரீட்சைக்குப் படிக்கலாம். ஆதலின் ஐய ரவர்கள் மீண்டும் தளராத முயற்சியுடன் படித்து, ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டாவது ஆண்டில் பி. எல். பரீட்சையில் தேர்ந்தார்கள். எல்லாரும் அவர்களுடைய விடாமுயற்சியையும் வெற்றியையும் மதித்து அவர்களைக் கொண்டாடி-னார்கள்.

> "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயி னார்"

என்னுஞ் செய்யுள் நம் ஐயரவர்கள்போல்வாரை நோக்கியே எழுந்ததுபோலும்.

இதைப் படிப்பவர்கள், முக்கியமாக மாணாக்-கர்கள், ஐயரவர்களின் விடாமுயற்சியை மேற்-கொள்ளுவார்களானால் எவ்வளவோ மேன்மை அடையலாம். வாழ்க்கையில் குறிக்கோளும் முயற்சியும் இருத்தல் வேண்டும். இன்றேல் வாழ்க்கை வாழ்க்கையாகாது. இங்கு, ஐயரவர்கள் பிறரால் தூண்டப்படாமல் தாமாகவே மேற்-கொண்ட முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இப்படி உயர்தரபரீட்சையில் தேர்ந்த ஐய-ரவர்களை எல்லாரும் கொண்டாடினார்கள் என்பது மட்டுமல்ல, அரசாங்கத்தினரும் ஐயரவர்களைப்பற்றி அக்காலத்தில் உயர்வாகவே கருதினார்கள்.

# 5. சிறப்புள்ள நியாயவாதி

ஐயரவர்கள் பி. எல். பட்டம் பெற்றபோது, சென்னை "ஹைகோர்ட்"டில் "ஹைக்கோர்ட் ரிப்போர்ட்ட" ராக "ஜே. ஸி. மில்ஸ்" என்பவர் வேலை பார்த்துவந்தார். அவரிடமிருந்து வேலையில் பழக ஐயரவர்கள் விரும்பினார்கள். உடனே மிஸ்டர் மில்ஸூம் ஐயரவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொண்டார். தம்மிடம் ஐயரவர்கள் வேலையில் பழகுகின்ற காலத்தில், அவர்கள் சிறந்த புத்திசாலி என்றும் மிக்க ஒழுங்கு வாய்ந்தவர்கள் என்றும் மில்ஸ் அறிந்துகொண்டார். அதனால், ஐயரவர்களைப்பற்றி மில்ஸ் என்பவர் மற்ற மேலதிகாரிகளிடம் சமயம் நேரும்போதெல்லாம் மேன்மையாகச் சொல்லிவரலானார்.

இவ்வாறு பெருமையுடன் ஐயரவர்கள் மில்ஸ் என்பவரோடு பழகிவருகின்ற காலத்தில், மதுரையில் தாசில்தாராய் இருந்த ஒருவர் "லீவ்" பெற்றுச் சென்றார். அந்த வேலையைப் பார்ப்பதற்கு அரசாங்கத்தார் நம் ஐயரவர்களை நியமித்தார்கள். ஐயரவர்களும் ஆறுமாதகாலம் அந்தத் தாசில்தார் வேலையை மிக நன்றாகச் செய்துவந்தார்கள். அந்தச் சொற்பகாலத்திற்குள் ஐயரவர்கள் பொதுமக்களிடத்திலும் அரசாங்கத்தாரிடத்திலும் நல்ல மதிப்பைப் பெற்றார்கள். அந்த ஆறுமாதம் கழிந்-

தவுடன் ஐயரவர்கள் சென்னைக்குச் சென்று, தம்மை "ஹைகோர்ட்" வக்கீலாகப் பதிவுசெய்து-கொள்ளும்படி உயர்தர நீதிபதிகளுக்கு விண்ணப்-பம் செய்துகொண்டார்கள். நீதிபதிகள் ஐயரவர்-களைப்போன்றவர்கள் நியாயவாதிகளாய் வருவது நியாயசபைகளுக்கே கௌரவ மெனக் கருதி ஐய-ரவர்களை "ஹைகோர்ட்"வக்கீலாகப் பதிவு செய்து கொண்டார்கள். அதனால் ஐயரவர்கள் எந்தக் "கோர்ட்"டில் வேண்டுமானாலும் போய் வக்கீலாக விளங்கலாம்.

சிறிது கல்வியைக் கற்றுச் சாதாரண வக்கீலாய் இருக்கத் தீர்மானித்த ஐயரவர்களை மேலும் படித்து உயர்தர வக்கீலாகச் செய்தது "காட்டன்" என்பவரின் நடத்தையே யாகும். நல்லவர்களுக்கு வருகின்ற தீமைகள் பெரும்பாலும் கடைசியில், நன்மையாகவே முடிவதை நாம் காண்கின்றோம்.

விடாமுயற்சியும் மனோதைரியமும் உள்ளவர்-கள் தங்களுக்கு எவ்வளவு இடையூறு வந்தாலும் தாங்கள் எடுத்த வேலையை விடாப்பிடியாகச் செய்து முடிப்பார்கள். சாமானியர்கள், தாங்கள் தொடங்கிய வேலைக்குச் சிறிது இடையூறு நேர்ந்தாலும் அந்த வேலையை அப்படியே விட்டு-விடுவார்கள். அதனால்தான் அத்தகையோர் சிறி-தும் முன்னேற்றத்தை அடைய முடியாதவர்க-ளாகின்றனர்.

நம் மணிஐயரவர்கள் வக்கீலாகச் சென்னை ஹைகோர்ட்டில் தம்மைப் பதிவு செய்துகொண்ட

பின்னர், மதுரையில் சென்று அத்தொழிலை நடத்தினால் நலமாய் இருக்குமென்று நினைத்தார்கள். கருதியபடியே அவர்கள் மதுரைக்குச் சென்று வக்கீல்தொழிலை மேற்கொண்டார்கள். ஐயரவர்கள் எந்த வழக்கை எடுத்துக்கொண்டாலும் அந்த வழக்கை நன்றாக அலசி அலசிப் பரீட்சைக்குப் படிப்பதுபோல் விஷயங்களைக் கவனிப்பார்கள். அதனால், அவர்கள் வழக்குக்களைச் சரிவர நடத்தி, அவைகளில் வெற்றிபெறலானார்கள். கட்சிக்காரர் சொல்வதை அனுதாபத்தோடு கேட்பார். கட்சிக்காரர்கள் சொல்லத் தெரியாமல் சொல்லுகின்ற விஷயத்தைப்பற்றி, அவர்களைத் திரும்பத் திரும்ப விசாரித்து உண்மையை நன்றாகத் தெரிந்துகொள்ளுவார். இதனாலும் கட்சிக்காரர்களுக்கு ஐயரவர்களிடம் விசேஷ மதிப்பு ஏற்பட்டது. 'சிறந்த வக்கீல்', 'பொறுப்பை உணர்ந்து நடக்கக்கூடியவர்' என்னும் பெயர்கள் வெகு சீக்கிரத்தில் ஐயரவர்களுக்கு ஏற்பட்டன. எல்லாரும் அவரைக் கொண்டாடத் தலைப்பட்டார்கள். ஐயரவர்களின் செல்வநிலையும் உயரத் தலைப்பட்டது.

ஐயரவர்களின் திறமையை அறிந்த அரசாங்கத்தினர் அவர்களை ஆயிரத்து எண்ணூற்று எழுபதாம் ஆண்டில் மதுரை "முனிசிபல்" சபையின் கௌரவ கமிஷனராக நியமித்தார்கள். அந்த வேலையையும் தமது வக்கீல்தொழிலோடு, ஐயரவர்கள் நன்கு கவனித்துவந்தார்கள். அப்போது ஐயரவர்கள்

பொதுமக்களுக்கு எத்தனையோ நன்மையைச் செய்தார்கள். பொதுமக்கள் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்காக, பதினெண்ணாயிரம் ரூபாய் செலவில் ஒரு பொதுஜன சிங்காரத்தோட்டத்தை ஏற்படுத்தினார்கள். அதற்காக ஐயரவர்கள் தமது சொந்தப்பணத்திலிருந்து நாலாயிரம்ரூபாய் செலவிட்டார்கள். மதுரையில் பிரசித்தி பெற்ற மீனாக்ஷிசுந்தரேசுவரரின் தேவாலயத்தில் ஐயரவர்கட்கு அளவற்ற அன்பு உண்டு. அந்த ஆலயத்தைச்சுற்றிலும், மதிற்சுவர்களை ஒட்டி அழகுபடுத்த வேண்டுமென்று நினைத்தார்கள்; மதிற்சுவர்களுக்குப் பக்கத்தில், கோயிலைச் சுற்றிப் பூந்தோட்டம் ஏற்படுத்தினார்கள். அந்த ஏற்பாட்டினால் கோயில் பின்னும் அதிக அழகைப் பெற்றது. அந்த அழகை இன்றும் காணலாம்.

ஐயரவர்கள் இப்படியெல்லாம் செய்ததற்குக் காரணம் என்ன? பொதுமக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று அவர்மனத்தில் இயற்கையாகவே குடிகொண்டிருந்த எண்ணந்தான். அக்காலத்தில் பொதுமக்களுக்காக உழைக்க வேண்டு மென்னும் எண்ணம் உள்ளவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் நம் மணிஐயரவர்களும் ஒருவர்.

ஐயரவர்கள் மதுரை முனிசிபல் சபையின் கமிஷனரா யிருந்த காலத்தில், சில முனிசிபல் அங்கத்தினர் நினைப்பதுபோல் நகரத்தின் தெருக்களைச் சுத்தம் செய்வதும் தெருக்களில் விளக்குக்-

களை அமைப்பதுமே நகரசபையின் வேலை என்று நினைக்காமல், நகரசபையின் மூலமாகப் பொதுமக்களின் உண்மையான நாகரிகவளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் செய்யவேண்டியவைகளையெல்லாம் தம்மால் இயன்றவரையில் செய்துவந்தார்கள்.

அந்தச் சமயத்தில், ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து மூன்றாவது வருடத்தில், மதுரை தேவஸ்தானத்தில் நாற்பதினாயிரம் ரூபாய் மோசடி செய்யப்பட்டிருப்பதாகக் கணக்கின்மூலம் தெரிந்தது. அந்த விஷயத்தை ஐயரவர்கள் அறிந்தார்கள். உடனே அதில் தலையிட்டு, மோசம் செய்தவர்களின் தயை தாட்சண்யங்களுக்குக் கட்டுப்படாமல் கோர்ட்டில் வழக்கு நடத்தி, வழக்கில் வெற்றிபெற்று, அபகரிக்கப்பட்ட நாற்பதினாயிரம் ரூபாயும் கோயிலுக்குச் சேரும்படி செய்தார்கள். இதனாலும் ஐயரவர்களைப் பொதுமக்கள் பெரிதும் மதித்தார்கள். அவர்களைத் "தேவஸ்தானக் கமிட்டி" அங்கத்தினர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுத்தார்கள். அன்றுமுதல் ஐயரவர்கள் தம்மால் முடிந்தவரையில் உழைத்து, தேவஸ்தானத்தின் பொருள்கள் வீணாகாதபடி, எவரும் அபகரிக்கமுடியாதபடி, பல ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவர்கள் செய்த ஏற்பாடு தேஸ்தானவேலைகள் நன்கு நடைபெறுவதற்கு வழி யாயின. அதனால் யார் இருந்தாலும் தேவஸ்தானவேலைகள் நன்கு நடைபெறலாயின. இப்படியாக ஐயரவர்கள் பல நல்ல பொது வேலை-

களைச் செய்துவந்ததனால் அவர்கள் மதுரைமாநகரத்தில் ஒரு தலைசிறந்த பெருமகனாய் விளங்கினார்கள்.

---

## 6. அரசறிந்த மதிப்பு

இவ்வாறாக ஐயரவர்கள் பேரும் புகழும் சீரும் செல்வாக்கும் பெற்றிருந்த காலத்தில், இங்கிலாந்தில் விக்டோரியா மகாராணியார் அரசாட்சி செய்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய முதல் மகனாகிய ஏழாவது எட்வர்ட் என்பவர் இளவரசராய் இருந்தார். அவர் இந்தியாவுக்கு வந்தபோது தென்னிந்தியாவில் உள்ள பல ஊர்களுக்கும் விஜயம் செய்தார். தென்னிந்தியாவில் சென்ற பல இடங்களுள் மதுரையும் ஒன்று. அவர் இன்ன தேதியில் மதுரைக்கு வருவார் என்பதை அறிந்த பலர் அவருக்குப் பொதுமக்களின் சார்பாக வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்து, வரவேற்புப்பத்திரத்தையும் தக்கவாறு எழுதி முடித்தார்கள்; அதை எட்வர்ட் இளவரசருக்கு யாரைக்கொண்டு படித்துக் கொடுக்கலாம் என்று யோசித்தார்கள்; ஐயரவர்களே அதற்குத் தக்கவர்கள் என்று முடிவு செய்து தங்கள் தீர்மானத்தை ஐயரவர்களிடம் சொல்லி, அதை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவ் வேண்டுதலுக்கு ஐயரவர்கள் இணங்கினார்கள்.

பிறகு, எட்வர்ட் இளவரசரை வரவேற்பதற்கு நேரிடுஞ் செலவுக்காகப் பொருள் சேர்க்கப்பட்டது. ஏராளமாகப்பொருள் சேர்ந்தது. வரவேற்புக்காக ஆடம்பரமான ஏற்பாடுகள் தாராளமாகச் செய்யப் பட்டன. இளவரசர் மதுரைக்கு விஜயம் செய்தார். வரவேற்புப்பத்திரத்தை நம் ஐயரவர்களே பதினயிரக்கணக்கான மக்களுக்கிடையில் படித்து இளவரசரிடம் கொடுத்தார்கள். இளவரசர் அதற்-குத் தகுந்த பதில் சொல்லி எல்லாரையும் மகிழ்-வித்தார். சில நாட்களாயினபின், இளவரசரின் வரவேற்புக்கான வரவு செலவுகளைக் கவனித்த-போது வசூலான பணத்தில் பதினன்கு ஆயிரம் ரூபாய் மிச்சமாய் இருந்தது. அதை என்னசெய்ய லாம் என்று யோசித்தனர். பொதுநலத் தொண் டிலேயே எப்போதும் நாட்டமுள்ள ஐயரவர்கள் அந்தப் பணத்தை வைகையாற்றில் பாலங் கட்டும் வகையில் உபயோகித்தார்கள்.

ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தேழாவது ஆண்டு ஜனவரிமாதம் முதல்தேதியன்று, இந்தியா-வின் இராஜப்பிரதிநிதியாய் இருந்த லிட்டன் பிரபு டெல்லியில் ஒரு தர்பார் நடத்தினர். அப்போது அந்தப் பிரபு பலரைப் பலவாறு பெருமைப்படுத்-தினர். அவர் ஐயரவர்களுக்கு அவர்களின் திறமை-யைக் குறிக்கும் நற்சாட்சிப்பத்திர மொன்றை வழங்கினர். இதனலும் ஐயரவர்களின் மதிப்பு உயர்ந்தது.

ஐயரவர்களை எல்லாரும் அறிந்தார்கள். அதனால் மதுரை நகரசபையின் உதவித்தலைவர்-(Vice-President) பதவி ஐயரவர்களுக்குக் கிடைத்தது. அக்காலத்தில் நகரசபையின் தலைவர்பதவியில் ஜில்லாக்கலெக்டர் அல்லது மாஜிஸ்டிரேட்டுகள்தாம் இருப்பராதலின், நகரசபையில் பொதுமக்கள் வகிக்கக்கூடிய பதவிகளில் ஐயரவர்கள் வகித்த பதவியே சிறந்த பதவி யாகும்.

இவ்வாறு ஐயரவர்கள் மதுரை நகரசபையின் உதவித்தலைவராய் இருந்த காலத்தில் ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து நான்காவது ஆண்டு, சென்னைக் கவர்னராய் இருந்த ஸர். எம். இ. "கிரான்ட் டப்" என்பவர் மதுரைக்கு வந்தார். அவருக்கு ஐயரவர்கள் மதுரை நகரசபையின் சார்பில், நகரசபையின் உதவித்தலைவர் என்னும் முறையில், ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். கவர்னர் பதிலளித்துவிட்டுச் சென்னை போய்ச் சேர்ந்தார். ஐயரவர்கள் "அதிபுத்திசாலி; திறமை வாய்ந்தவர்" என்று உட்கொண்ட கவர்னர் தாம் சென்னைக்குச் சென்றபிறகு ஐயரவர்களைச் சென்னை சட்டசபையில் உத்தியோகப்பற்றில்லாத ஓர் அங்கத்தினராக்கினார். இந்தப் பதவியிலிருக்கும்போது ஐயரவர்கள் குடிகளின் நன்மைக்கான காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

# 7. மனைவியின் பிரிவு

ஐயரவர்களுக்கு எப்போது கலியாணமாயிற்று என்று நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஆயினும் ஐயரவர்களின் மனைவியார் "பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை" என்பதுமட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. "ஊசி போகிற வழியிலேயே நூலும் போகும்" என்பதற் கேற்ப, அந்த அம்மையார் கணவர்கருத்தே தம் கருத்தாகக் கொண்டு இல்லறத்தை நல்லறமாக நடத்திவந்தார். ஆண்மகனுடைய வாழ்க்கை சிறப்படைவதற்கும் அடையாமற் போவதற்கும் மனைவி பாதிப்பொறுப்புள்ளவள் என்று கூறுவது தவருகாது. நம் ஐயரவர்கள்மனைவியார் எவ்வகையிலும் ஐயரவர்களின் சிறப்புக்கு ஏற்றவராயே இருந்தார்.

இத்தகைய நற்குணம் வாய்ந்திருந்த அம்மையார் பல மாத காலம் நோய்வாய்ப்பட்டிருந்து, எவ்வளவோ சிகிச்சை செய்யப்பெற்றும் குணமடையாமல், ஆயிரத்துஎண்ணூற்று எண்பத்துநான்காவது ஆண்டில் இவ்வுலகவாழ்க்கையைவிட்டு நீங்கினர். ஐயரவர்கள் தம் மனைவியாரின் பிரிவைச் சகிக்கமுடியாமல் வருந்தினர்கள். அவ் வருத்தமே அவர்களின் வாழ்க்கைநிலையை ஒருவாறு மாற்றியதென்னலாம். உலக நிலையாமை. வாழ்க்கை நிலையாமை போன்ற எண்ணங்கள் அவர்மனத்தில் அலை அலையாக எழுந்தன. உலகம் அவருக்கு வெறுப்பாகத் தோன்றியது.

அப்போது சென்னை அடையாற்றில் "தியாசபிகல் சொஸைட்டி" அல்லது "பிரமஞான சங்கம்" என்று சொல்லப்படுகின்ற ஸ்தாபனம் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தது; அதன் கிளைஸ்தாபனங்கள் பல இடங்களில் சிறப்பாக விளங்கின. அதில் அறிவாளிகள் பலர் சேர்ந்து, ஒருவரோடொருவர் ஆத்மார்த்தமான விஷயங்களைப்பற்றி அளவளாவி வந்தனர். அந்தச் சங்கத்தில் நம் மணிஐயரவர்களும் சேர்ந்து தமது அந்தியகாலம்வரையில் அந்தச் சங்கத்தின் சிறந்த அபிமானியாய்த் திகழ்ந்தார்கள்.

ஐயரவர்கள் சட்டசபை அங்கத்தினரானபிறகு, சிறிது காலம் கழித்து, சென்னை "ஹைகோர்ட்"டில் தமது வக்கீல்தொழிலை நடத்தலானார்கள். முதலில் ஐயரவர்களுக்கு அவ்வளவாக நல்ல வரும்படி வரவில்லை. அதனால் அவர்கள் மதுரைக்கே மறுபடியும் செல்லலாம் என்று நினைத்தார்கள். இதற்கிடையில் ஐயரவர்களுக்குப்பிரபல வக்கீல்களிடையிலும், அக்காலத்திலிருந்த வேறு பல பெருமக்களிடையிலும் நல்ல பழக்க மேற்பட்டது. அதனால், ஐயரவர்கள் மதுரைக்குப்போக நினைத்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு, சென்னையிலேயே நிரந்தரமாகத் தங்கியிருக்கலானார்கள். வர வர, சென்னை ஹைகோர்ட்டில், வக்கீல் வேலையில் ஐயரவர்களுக்கு நல்ல பேரும் புகழும் பெருகின. "ஐயரவர்கள் விடாமுயற்சியுள்ளவர்கள்;

கூர்மையான அறிவு பெற்றவர்கள்; நியாயத்தோடு நடப்பவர்கள்'' என்ற எண்ணம் எல்லாருக்கும் உண்டாகியது. அப்போது ''கவர்ன்மெண்ட் வக்கீல்''பதவி காலியாயிற்று. அந்தப்பதவிக்கு அதுவரையில் இந்தியர் எவரையும் நியமித்ததே இல்லை. ஆயினும், அரசாங்கத்தினர் நம் மணி-ஐயரவர்களின் சிறப்பை உணர்ந்து அவர்களுக்கு அந்தப்பதவியை அளித்தனர். ஐயரவர்கள் அந்தப் பதவியை வகித்து விசேஷமான பல வழக்குக்-களில் அரசாங்கத்தின் சார்பாக வாதாடி வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவைகளுள் இரண்டு வழக்-குக்களைப்பற்றிமட்டும் இங்குக் குறிப்பிடுகிறோம்.

ஐயரவர்கள்காலத்தில், கும்பகோணத்தில் நாகேசுவர ஐயர் என்பவரொருவர் இருந்தார். அவர் அவசியமென்று பட்டால் நியாயத்திற்கு விரோதமான காரியங்களையும் செய்வார். ஆனால், பெரும்பாலும் அவர் செய்கின்ற காரியங்களெல்-லாம் பரோபகாரத்தைப் பற்றியவைகளாகவே யிருக்கும். அதாவது: நியாயமோ நியாய-மில்லையோ, அதைப்பற்றி அவர் கவனிப்பதில்லை. ஒருவருக்கு ஒரு நன்மை செய்ய வேண்டுமென்றால், அதை எந்த வழியிலாவது செய்து முடிப்பார். விஷயத்தை முடிக்கவேண்டு மென்பதுவே அவர்-நோக்கம். ''எப்படி முடிக்கிறோம்'' என்பதைப்-பற்றி அவர் கவலைப்படுவது இல்லை. அதனால், அவர் சில சமயங்களில் தவறான, நியாயமற்ற, கள்ளக்கையெழுத்திடுதல்போன்ற காரியங்களையும்

துணிவாகச் செய்துவிடுவார். அவர் செய்கின்ற அநேகம் வேலைகள் அரசாங்கத்தினரையும் கலங்கச் செய்துவிடும். அரசாங்கத்தினர் அவரை எப்படியாவது, அவர் செய்யுங் குற்றத்தோடு கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டுமென்று எண்ணினார்கள். எவ்வளவுதான் கெட்டிக்காரர்களாய் இருந்தாலும், தவறு செய்கிறவர்கள் எப்போதும் தப்பித்துக்கொள்ள முடியுமா? ஒருமுறை அந்த நாகேசுவரஐயர் கள்ளக்கையெழுத் திட்டதாக ஒரு வழக்கில் சிக்கிக்கொண்டார். போலீஸ்காரர்கள் அந்த வழக்கை மிகத் திறமையாக நடத்தினார்கள். அந்த வழக்குப் பொதுஜனங்களின் கவனத்தையும் மிகுதியாகக் கவர்ந்தது. நாகேசுவரஐயரின் சார்பில் பிரபல வக்கீல்கள் வாதாடினர். நம் மணிஐயரவர்கள் கவர்ன்மெண்டின் சார்பாகப் பேசினார்கள். ஆகலின், நாகேசுவர ஐயரால் தண்டனையிலிருந்து மீள முடியவில்லை. இதனாலும் மணிஐயரவர்களுக்கு "நேர்மையாளர்" என்னும் பெயர் பரவிற்று.

ஐயரவர்கள் அரசாங்கச்சார்பாகப் பேசி வெற்றிபெற்ற வழக்குக்களுள் மற்றொன்று திருப்பதி தேவஸ்தானத் தலைவராயிருந்த மகந்துஎன்பவரைப்பற்றிய தாகும். மகந்து திருப்பதிகோயிலில் புதிதாக ஒரு துவஜஸ்தம்பம் செய்து நிலைநிறுத்தினர். முற்காலத்தில் கோயில்களில் மூலஸ்தானத்தில் விக்கிரகங்களையோ அல்லது வெளியில் துவஜஸ்தம்பங்களையோ அமைக்கும்போது அவை-

களின் அடியில் பொன் துண்டுகளையாவது பொன்னுணயங்களையாவது வைப்பது வழக்கம். அவ்வாறே தாமும் சுமார் இரண்டு லட்சம் ரூபாய்கள் மதிப்புள்ள பொற்காசுகளைத் தாம் பிரதிஷ்டை செய்த துவஜஸ்தம்பத்தின் அடியில் பரப்பியிருப்பதாக மகந்து கணக்குக் காட்டினர். அந்த ஸ்தம்பத்தின் அடியில் பொற்காசுகளுக்குப் பதிலாக செப்புக்காசுகளே பரப்பப்பட்டிருந்தன என்று சொல்லப்பட்டது. பிறகு மகந்தின்மீது வழக்கு ஏற்பட்டது. அந்த வழக்கு "ஹைகோர்ட்" டுக்கு வந்தது. மகந்தின் சார்பாகப் பிரபல வக்கீலான "நார்ட்டன்" துரை பேசினர். அரசாங்கத்தினரின் சார்பாக நம் ஐயரவர்கள் பேசினர்கள். "துவஜஸ்தம்பத்தைப் பெயர்த்துப் பார்த்துவிட்டால், உண்மை விளங்கிவிடுமே!" என்று இறுதியாகக் கூறி, அதையொட்டி ஐயரவர்கள் பின்னும் சில செய்திகளைக் கூறினர்கள். "புனிதத் தன்மைபொருந்த ஸ்தாபிக்கப்பட்ட துவஜஸ்தம்பத்தைப் பெயர்ப்பது சாஸ்திரவிரோதமான செய்கையாகும்" என்று நார்ட்டன் துரை வாதித்தார். நீதிபதிகள், இறுதியில், "துவஜஸ்தம்பத்தைப் பெயர்த்துப் பார்ப்பதே சரி" என்று தீர்ப்புக் கூறினர்கள். அவ்வாறு தீர்ப்புக்கூறிய நீதிபதிகளுள் மிக நல்லவரும், திறமை வாய்ந்தவருமான ஸர். தி. முத்து சாமிஐயரவர்களும் ஒருவர். பிறகு, துவஜஸ்தம்பம் பெயர்த்துப் பார்க்கப்பட்டது. அதன் அடியில்

செப்புக்காசுகளே பரப்பி வைக்கப்பட்டிருந்தன. இப்படிப் பல கோயில்களிலும் பொதுத் தருமஸ்தாபனங்களிலும் ஊழல்கள் நடைபெற்றபடியால்தான் "இந்துமத தருமபரிபாலன சபை" (Religious Endowment Board) அரசாங்கத்தினரால் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சபையார் இப்போது கோயில்களையும் பொதுஸ்தாபனங்களையும் கவனித்து வருகின்றனர்.

---

## 8. "டாக்டர் ஆவ் லாஸ்"

ஐயரவர்கள் அடிக்கடி தமது நிலைக்கேற்றவாறு அரசாங்க உத்தியோகஸ்தராகவும் வக்கீலாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் அந்த நிலைக் கேற்றபடி பொதுமக்களுக்கு உழைக்கத் தவறியதில்லை. அவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தராய் இருந்த காலத்திலும் தமக்கு நியாயம் என்று பட்டதைச் செய்துவந்தார்களேயன்றி, எவருடைய தாட்சண்யத்திற்காவது கட்டுப்பட்டு மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கவில்லை. அவர்கள் எப்போதும் அரசாங்கத்தினரின் கையாளாகவோ அல்லது அரசாங்கத்தினரின் கருத்து யாதானாலும் அதை அப்படியே ஒப்புக்கொள்பவராகவோ இருந்ததில்லை.

மக்களின் நலத்திற்காக எதை எடுத்துச் சொன்னாலும் அரசாங்கத்தாரின் மனத்தில் பதியும்-

படி சொல்வதில் ஐயரவர்கள் சிறந்து விளங்கினார்கள். பொதுவாக, பொது விஷயங்களில் தலையிட்டுப் பேசுவதில், இந்தத் திறமை வக்கீல்களிடத்திலும் உபாத்தியாயர்களிடத்திலும் சிறந்து காணப்படும். ஆயினும், இது மணி ஐயரவர்களிடம் மிகச் சிறந்து காணப்பட்டது.

இந்தியாவில் பயிர்த்தொழில் செய்கிறவர்களே மிகுதியாய் இருக்கின்றார்கள். அவர்கள்விஷயத்தில் ஐயரவர்களுக்கு மிகுதியும் அக்கறை உண்டு. ஆனால், நேரே நிலத்தில் இறங்கி வேலை செய்கிறவர்கள்விஷயத்தில்தான் ஐயரவர்களுக்கு அதிக அன்பு. ஒரு முறை ஐயரவர்கள் "இந்தியப்பஞ்சக் கமிஷன்" முன், சாட்சி கூறச் சென்றார்கள். அப்போது அவர்கள், நிலத்திற்குரியவர்களான ஜமீன்தார் முதலியவர்களால் அவர்கள்கீழுள்ள குடிகளுக்குக் கொடுமை ஏற்படாதிருப்பதற் கேற்ற வழி வகைகளைச் செய்யவேண்டு மென்று கூறினார்கள்.

நம் ஐயரவர்கள் நகரசபைகளில் அவைகளின் முன்னேற்றத்திற்கான நல்ல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று மிகப் பாடுபட்டார்கள்; சமயம் நேர்ந்தபோதெல்லாம் அதற்காகப் பேசியும் எழுதியும் வந்தார்கள். இந்தியாவில் இராஜப்பிரதிநிதியாயிருந்தவரும் இந்தியர்களிடம் உண்மையாகவே உள்ளன்புகொண்டவருமாகிய ரிப்பன் பிரபு நகரசபைகளின் சம்பந்தமாகச் சீர்திருத்தம்

செய்தமைக்கு, ஐயரவர்களைப்போன்றவர்கள் செய்த முயற்சியும் ஒரு காரணமாகும்.

ரிப்பன் பிரபு 'முனிசிபாலிடி' முதலிய ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகப்பொறுப்பை இந்தியர்களிடமே விட்டு, அதன்மூலம் அவர்களைத் தங்கள்-காரியங்களைத் தாங்களே செய்துகொள்ளுந் திறமை வாய்ந்தவர்களாகச் செய்யலாம் என்று கருதினர். அதற்கான ஒழுங்கு முறைகளைக் கண்டறியுமாறு சில அங்கத்தினரைக்கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அந்தக் கமிட்டியின் பெரும்பாலாரான அங்கத்தினர்கள் செய்த முடிபு ஐயரவர்கட்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆகலின், ஐயரவர்கள் தமது கருத்தைத் தனியாகவே தெரிவித்தார்கள்.

பொது வியவகாரங்களிலும் ஐயரவர்கள் சமயம் நேர்ந்தபோதெல்லாம் ஈடுபட்டுத் தமக்கு நியாயமாகத் தோன்றிய வரையில் பேசியும் உழைத்தும் வந்தார்கள்.

ஐயரவர்கள் இரண்டு முறை உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினராக அரசாங்கத்தினரால்சென்னை சட்டசபையில் நியமிக்கப்பட்டார்கள். அக்காலத்தில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு இப்போது இருப்பதைப்போல இவ்வளவு உரிமை இல்லை. ஆயினும், இருந்த உரிமையை உபயோகித்து ஐயரவர்கள் மக்களுக்கு எவ்வளவு நன்மை செய்யமுடியுமோ அவ்வளவு நன்மையையும் செய்துவந்தார்-

கள். அவைகளுட் பல குறிப்பிடத்தக்கன. ஆனால், இங்கு ஒன்றைமட்டும் சொல்லுகிறேன். ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தாருவது ஆண்டில் ஐயரவர்கள், “மாகாணக்குடிவார மசோதா”வைக்கொண்டுவந்து சட்டசபையில் நிறைவேற்றினார்கள். அதனால் மலையாளத்திலுள்ள குடியானவர்களுக்கு உற்சாகமேற்பட்டது.

கல்விக்காகவும் ஐயரவர்கள் உழைத்திருக்கிறார்கள். ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தைந்தாவது ஆண்டுமுதல் ஆயிரத்துத் தொளாயிரத்து ஏழாம் ஆண்டுவரையில் ஐயரவர்கள் சென்னை “யூனிவர்ஸிடி”யின் அங்கத்தினராய் இருந்தார்கள். அக்காலத்தில், அவர்கள் நமது நாட்டு இளைஞர்களின் கல்விஅபிவிருத்திக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார்கள். அக்காலத்தில் நடைபெற்ற விஷயங்களை அவைகள் பதிவு செய்யப்பட்டிருக்கும் புஸ்தகங்களில் காணலாம். ஐயரவர்கள் மாணக்கர்களின் பாட திட்டங்களைக் குறைத்துப் பரீட்சையில் அவர்கள் படுந் துன்பத்தைப் போக்குவதற்குப் பாடுபட்டார்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஐயரவர்களுக்குக் கல்விசம்பந்தமாக இருந்த ஆர்வத்தை உணர்ந்த அரசாங்கத்தினர் ஐயரவர்களை யூனிவர்ஸிடியின் வைஸ்சான்ஸலராக நியமித்தார்கள். இந்தியர்களுள் ஐயரவர்களுக்குத்தான் அந்தப் பதவி முதன்முதல் நல்கப்பட்டது. இது மட்டுமல்ல : ஐயரவர்கள் சட்டஞானத்தில் மிகவும்

வல்லவர்கள் என்பது எல்லாருக்கும் தெரியுமாதலின், அது சம்பந்தமாக அவர்களுக்கு ஒரு பட்டம் வழங்கப்படவேண்டுமென்று எல்லாரும் நினைத்தார்கள். அதனல் சென்னை சர்வகலாசாலையார் ஐயரவர்களுக்கு ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டாவது ஆண்டில் 'சட்ட நிபுணர்' என்னுங் கருத்துப் பொருந்திய "டாக்டர் ஆவ் லாஸ்" என்னும் பட்டத்தை வழங்கினர்கள். இத்தகைய பட்டத்தை இந்தியர்களுள் முதன்முதல் பெற்றவர் நம் ஐயரவர்களே. இப்படியாக ஐயரவர்களுக்கு மேலும் மேலும் பெருமை வளர்ந்துகொண்டேவந்தது. இதற்கிடையில் ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்ருரும் ஆண்டில் சென்னை சர்வகலாசாலை பீ. ஏ. பரீட்சையில் தேர்ந்தவர்களுக்குப் பட்டமளிப்பு விழா நடந்தபோது, நன்மதி கூறும்படி ஐயரவர்களைச் சர்வகலாசாலையார் கேட்டுக்கொண்டார்கள். அப்போது ஐயரவர்கள் நமது நாட்டு மாணக்கர்களுக்கு உரைத்த நன்மதி எல்லாராலும் போற்றுவதற்குரியதாய் இருந்தது.

---

## 9. சிறப்புள்ள நீதிபதி

ஐயரவர்களின் பேரும் புகழும் உச்சநிலையில் இருந்தன. அவர்கள் பொதுவாக அக்காலத்தில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் சிறந்தபேரறிவு

படைத்தவர்களாய் விளங்கினார்கள். சிறப்பாக, சட்ட சம்பந்தமான எந்தச் செய்திகளும் அவர்களுக்குக் கொஞ்சமும் சிக்கலானவையாய் இருக்கவில்லை. ஆகலின், அரசாங்கத்தினர் ஐயரவர்களைச் சென்னை "ஹைக்கோர்ட்" நீதிபதிகளுள் ஒருவராக அமர்த்த வேண்டுமென்று நினைத்து, அதற்கேற்ற காலத்தையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சென்னை ஹைக்கோர்ட் நீதிபதியாக இருந்தவர்களுள் "ஸர். தி. முத்துசாமி ஐயர்" என்றால் அரசாங்கத்தினர் உட்பட எல்லாருமே "உழைப்பால் உயர்ந்தவர்; மிக நல்லவர்; சட்ட ஞானத்திலே உயர்ந்த மகான்" என்று சொல்லுவார்கள். அத்தகைய பெரியாரைப்பற்றி இன்றைக்கும் எல்லாரும் நன்கு பாராட்டுகிறார்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த ஸர். தி. முத்துசாமி ஐயரவர்கள் தமது நீதிபதிவேலையை விட்டு விலகி ஓய்வு பெற்றார்கள். அவர்கள் இருந்த இடத்தில் நீதிபதியாக யாரை அமைக்கலாம் என்று அரசாங்கத்தினர் எண்ணினர். ஏனெனில், ஸர். தி. முத்துசாமி ஐயரவர்கள் இருந்த இடத்தில் இருக்கக்கூடியவர்கள் மேதாவிகளாய்த்தான் இருக்கவேண்டும். இன்றேல், மிகவும் வேறுபாடு தெரிந்துவிடும்.

அரசாங்கத்தினர் நீடு நினைந்து இறுதியில் முத்துசாமி ஐயரவர்கள் இருந்த இடத்தில் நம் மணி-

ஐயரவர்களையே ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்தாவது ஆண்டில் நீதிபதியாக நியமித்தார்கள். தாம் நீதிபதியான பிறகு, மிகக் குறுகியகாலத்திற்குள்ளாகவே ஐயரவர்கள், முத்துசாமிஐயரவர்களிருந்த இடத்தில் இருப்பதற்கு எவ்வகைலும் தகுதி உள்ளவர் என்று எல்லாரும் சொல்லும்படி விளங்கினர்கள். அப் பதவியிலும் ஐயரவர்களுக்குப் பேரும் புகழும் பெருகின. "இந்திய நியாயாதிபதிகளுள் ஐயரவர்கள்யாருக்கும் பிற்பட்டவரல்லர்" என்று எல்லாரும் கருதினர்கள். தலைமைநீதிபதிவேலையைப் பார்ப்பதற்கு ஒருநீதிபதி வேண்டியதா யிருந்தபோதெல்லாம் நம் ஐயரவர்களே அந்த வேலையைப் பார்ப்பதற்கு நியமிக்கப்பட்டார்கள். இவ்வாறு ஐயரவர்கள் மூன்றுமுறை தலைமை நீதிபதியாக வேலைபார்த்திருக்கிறார்கள். இந்தக்காலங்களிலெல்லாம் ஐயரவர்களுக்கு நல்ல பெயரே ஓங்கி வளர்ந்தது. இதனல், ஐயரவர்களுக்கு ஆயிரத்துத் தொள்ளாயிரமாண்டில் அரசாங்கத்தினர் "ஸர்" என்னும் பட்டத்தை அளித்தார்கள். இதற்கு முன்னரே, வேறு பல பட்டங்களை அரசாங்கத்தினர் ஐயரவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

ஐயரவர்கள், தமது இடைவிடா முயற்சியினலும் உழைப்பினலும் முன்னேற்றமடைந்தவர்கள் என்பது இதுவரையில் இதைப் படித்தவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவர்கள் ஓயாது உழைத்த

காரணத்தினல் உடல்நலம் சிறிது குன்றியது. ஆகவே, ஆயிரத்துத்தொளாயிரத்தேழாம் ஆண்டு நவம்பர் மாதம் பதின்மூன்றாந் தேதி, ஓய்வு பெறுவதற்காகத் தமது நீதிபதிப்பதவியிலிருந்து விலகினார்கள். "ஹானரபிள், ஜஸ்டிஸ், திவான் பகதூர், ஸர். எஸ். சுப்பிரமணியஐயர் கே. சி. ஐ. இ" என்று எல்லாராலும் கொண்டாடப்பட்ட ஐயரவர்களின் அருமை பெருமைகளைபற்றியும் திறமையைப்பற்றியும் அரசாங்கத்தினர் ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். இப்படியாக ஐயரவர்கள் ஓர் இந்தியர் அடையக்கூடிய பெரும்பதவியை அடைந்து வாழ்ந்தமைக்குக் காரணம் அவருடைய "விடாமுயற்சியே" என்பதை மாணாக்கர்கள் மறவாமல் தங்கள்மனத்தில் வைத்து, அவர்கள்செயலைப் பின்பற்றுவார்களானல் பெருநலன் அடைவார்கள் என்பது எமது நம்பிக்கை.

# 10. உயர் குணங்கள்

முற்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி. அநேகர் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றால் உண்பதும் உறங்குவதுமாகவே இருந்து காலத்தைக் கழிப்பர். ஆனல், நம் ஐயரவர்கள் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்ட பின்னர், பல பொதுவிஷயங்களில் ஈடுபட்டுத் தேசமக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டார்கள். அவர்கள், இறக்கும்வரையில் ஊக்கமுள்ள ஓர் இளைஞரைப்போலவே தேசத்தின் நன்மைக்காகப் பாடுபட்டார்கள். அவர்கள். நாணயமுள்ள வக்கீலாகவும்,

உயர்ந்த நியாயாதிபதியாகவும், தலைசிறந்த தேசாபிமானியாகவும் விளங்கினார்கள். ஐயரவர்கள் தேசப்பற்றோடு மொழிப்பற்றும் உள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்கள் சம்ஸ்கிருதப் புலவர்களுக்கும் தமிழ்ப்புலவர்களுக்கும் நன்மை செய்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் “இந்த மொழி உயர்ந்தது; இந்த மொழி தாழ்ந்தது” என்னுங் கொள்கை இல்லை. ஒவ்வொரு மொழியும் அதனதன் போக்கில் உயர்ந்த தென்பதே அவர்கள்கொள்கை. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய ‘திருக்கோவையார்’ என்னுங் கோவைநூலிலும் அதன் உரையிலும் நம் ஐயரவர்கட்கு மிக்க விருப்பம் உண்டு. அவற்றைச் சிறந்த தமிழ்ப்புலவர்களிடம் சிலமுறை படித்துத் தேர்ந்தார்கள். அவர்கட்குத் தமிழ்ப்புலவரிடத்தில் மிக்க மதிப்பு உண்டு. புகழுடம்பொடு விளங்கும் மஹாமஹோபாத்யாய, டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள் செய்த தமிழ்த்தொண்டினைப் பாராட்டி, அவர்கட்கு ஊக்க மளித்து வந்தார்கள். அரசாங்கத்தில் உயர்நிலையை வகிப்பவர்கள் பலருக்கு ஐயரவர்களைப்போல மொழிப்பற்று இருக்குமாயின் நாட்டுக்கு எவ்வளவோ நன்மை விளையுமே!

சட்டசம்பந்தமாக ஐயரவர்கள் எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறார்கள்; தேவஸ்தானங்களின் சீர்திருத்தங்களுக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள்; கல்வியின் சீர்திருத்தங்களுக்காக உழைத்திருக்கிறார்கள். ஐயரவர்கள் பழகுவோரின் மனத்தில் இன்பம் நிலவும்படியான பெருந்தன்மை

வாய்ந்தவர்கள்; அவர்களது விசாலமான நெற்றி-யும் வசீகரமான பார்வையும் அவர்கள் சிறந்தவர்-கள் என்பதைக் குறிக்கும். ஐயரவர்களால் எத்-தனையோ மக்கள் முன்னேற்ற மடைந்தார்கள். வக்கீல்களுள்ளும் சிலர் அவர்களால்தான் முன்-னேற்ற மடைந்தார்கள் என்று சொல்வது மிகை-யாகாது.

ஐயரவர்களிடத்தில் காணப்பட்ட நல்ல குணங்-கள் எல்லாரும் அவர்களை விரும்படி செய்தன. "மணிஐயர்" என்று அருமை தோன்றச் சொன்ன மாத்திரத்தில், அவ்விதம் சொல்லப்படுதற்குரியவர் நம் ஐயரவர்களே என்பது எல்லாருக்கும் தெரிந்து-விடும். தன்னலமின்மையும் தாராள குணமும் அவர்களுக்கே உரிய சிறந்த குணங்க ளாகும். ஆனால், அவர்கள் பெருமைக்காக எதையும் செய்-கிறவர்களே அல்லர். அவர்களுடைய இல்லத்தில் தினந்தோறும் அவர்கள்உதவியை நாடிப் பலர் வருவார்கள். ஐயரவர்கள் அவர்களோடு இன்ப-மாகவே அளவளாவிப் பேசுவார்கள். "நம் உத-வியைநாடித்தானே அவர்கள் வந்திருக்கிறார்கள்," என்று நினைத்து, வந்தவர்களிடம் சிறிதேனும் அலட்சியமாய் நடந்துகொள்ளமாட்டார்கள். படித்தவர்களுக்கு ஏற்ற வேலையைத் தேடிக் கொடுப்பதிலும், ஆதரவற்ற மாணாக்கர்களுக்கு உபகாரச்சம்பளம் உதவுவதிலும் ஐயரவர்கள் முன்-னணியில் நின்றார்கள். ஐயரவர்கள் எப்போதும் எவரிடத்திலும் மரியாதையாகவும், நிதானமாகவும்

பேசுவார்கள். பிறர்செய்த குற்றத்தை எடுத்துக்-கூறுவதாய் இருந்தாலும் அவர்கள் ஒப்புக்கொள்ளும்படி நயமாகக் கூறுவார்கள். அவர்கள் படிப்படியாக உயர்ந்தவர்களானதனுல் உலகஅனுபவம் அவர்களிடத்தில் நிரம்பியிருந்தது. அவர்கள் எப்போதும் தம் உயர்ந்த நிலையை எண்ணிப் பெருமை பாராட்டியதே இல்லை.

இத்தகைய அருங்குணம் வாய்ந்த ஐயரவர்கள் தமது இறுதிக்காலத்தில் நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பல அரியவேலைகளைச் செய்து உடல் சோர்வுற்று, ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்துநான்காவது ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாந் தேதியன்று சென்னைக்குச் சமீபத்தில் உள்ள கிண்டி என்னுஞ் சிற்றூரில் தமது இல்லத்தில், இவவுலகை விட்டு நீங்கினுர்கள். அவர்கள் நம்மைவிட்டு நீங்கினுலும், இவ்வுலகத்திலே அவர்கள் பெயர், அவர்கள் புகழ் என்றைக்கும் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

ஐயரவர்கள் சாதாரணகுடும்பத்தில் பிறந்து, சலியாது உழைத்து, எவ்வெவர் தீமையையும் பொருட்படுத்தாமல், உயர்ந்த நிலையை அடைந்தார்கள். அவர்கள்வாழ்க்கை மாணுக்கர்களுக்கேயன்றிப் பெரியவர்களுக்கும் முன்மாதிரியாய் இருந்து ஊக்கத்தையும் உயர்வையும் அளிக்கும் என்பது என் நம்பிக்கை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக."

# ரமேச சந்திர தத்தர்

# உள்ளுறை

---

1. ஆரம்பம்: கல்வி
2. "இந்தியன் சிவில் சர்விஸ்"
3. பெரியோர் நட்பு
4. உண்மையுள்ள உழைப்பாளர்
5. நூலாசிரியர்
6. "வைஸ்ராய்" மதிப்பு
7. இலக்கியச் சங்கம்
8. சரித்திர ஆசிரியர்
9. கைத்தொழில்
10. நல்ல "திவான்"

# 2. ரமேச சந்திர தத்தர்

---

## 1. ஆரம்பம்: கல்வி

இந்தியாவில் பிறந்து மனோதிடத்தாலும், தன்னம்பிக்கையாலும், உழைப்பினாலும் உயர்ந்து, நாட்டிலுள்ள பொதுமக்களின் நன்மைக்காகப் பாடுபட்ட பெரியார் எவருக்கும் ரமேச சந்திர தத்தர் பிற்பட்டவரல்லர். இன்னும் மற்றவர்களுக்கு இல்லாத சில தனிச்சிறப்புக்கள் அவருக்கு உண்டு என்று சொல்லலாம். அவர்காலத்தில் ஓர் இந்தியருக்கு அரசாங்கத்தில் எவ்வளவு உயர்ந்த உத்தியோகம் கிடைக்கக் கூடுமோ அவ்வளவு உயர்ந்த உத்தியோகத்தையும் அவர் வகித்திருக்கின்றார்; அரசறிய வாழ்ந்திருக்கின்றார்; தேசமக்களுக்காக உண்மையாக உழைத்திருக்கின்றார். அவர்காலத்தில் அவரைப்போல உலகமெங்கும் சென்று பார்த்தவர்கள் நம் நாட்டில் வேறு ஒருவரும் இல்லை என்று சொல்லலாம். அவர் பல மொழிகளைக் கற்றவர். அவருடைய தாய்மொழியாகிய வங்கமொழியிலே அவர் பல அருமையான நூல்களை எழுதியிருக்கின்றார்.

ரமேசர் பிறந்த குடும்பம் கல்வியாலும் செல்வத்தாலும் சிறந்த குடும்பம். அவர்பரம்பரையில், முன்னோர்கள் பெரும்பாலும் கல்வியில் தேர்ந்தவராய் வாழ்ந்தார்கள். அவர்குடும்பத்தைச் சேர்ந்த "தோருதத்" என்னும் அம்மையார் ஆங்கிலேயர்க-

ளாலும் பாராட்டத்தக்கவண்ணம் ஆங்கிலத்தில் கவிபாடும் வன்மை பெற்றிருந்தார். ரமேசர்தகப்பனுருடைய பாட்டனுர் கல்கத்தாவில் நல்ல செல்வாக்குடன் வாழ்ந்தார். அவர்குடும்பத்தைச் சேர்ந்த வேறு ஒருவர் கல்கத்தாவில் "சுமால்காஸ் கோர்ட்" டில் முதல்இந்தியநியாயாதிபதியாய் இருந்தார். ரமேசர்தந்தையாரும் வங்காளத்தில் "டிபுடிகலெக்டர்" பதவியில் அமர்ந்திருந்தார். அவருடைய பெயர் இசன் சந்த்ரர் என்பது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பரம்பரையில் ரமேசர் ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தெட்டாவது ஆண்டு ஆகஸ்டு மாதம் பதின்மூன்ருந் தேதியில் பிறந்தார்.

ரமேசர் தமது இளம்பருவத்தில் தம் தந்தையோடு வங்காள மாகாணத்தில் உள்ள பல ஜில்லாக்களில் வசித்துவந்தார். இசன் சந்த்ரர் டிபுடிகலெக்டராய் இருந்தபடியால் அவர் அடிக்கடி பல ஜில்லாக்களுக்கு மாற்றப்பட்டார். அதனுல், இயல்பாகவே நல்ல அறிவு வாய்க்கப்பெற்ற ரமேசர் ஆங்காங்கு உள்ள பல இயற்கைத்தோற்றங்களைக் கண்டு களிக்கலானுர். அக்காலத்தில், இப்போதிருப்பதைப்போல ரயில் வசதி இல்லை. ஆதலின், எங்குப் போகவேண்டு மானுலும் பெரும்பாலும் நடந்தோ அல்லது வண்டிகளிலோதான் போகவேண்டும். ரமேசர் அடிக்கடி ஆங்காங்குத் தம் தந்தையாரோடும் குடும்பத்தாரோடும் பெரும்பாலும்

உல்லாசமாக வண்டிகளில் செல்வார். அப்போது அவர் ஆங்காங்குக் காணப்படும் ஆறுகளையும் நீர்நிலைகளாகிய ஏரி குளங்களையும் கண்டு மகிழ்வார்.

இவ்வாறாக, ரமேசர் ஒருவிதக் கவலையுமின்றிப் பாடிப் பறக்கும் பறவைகளைப்போல உல்லாசமாகக் காலங் கழித்துக்கொண்டிருக்கும் இளம் பருவத்தில் அவருக்குக் கவலைக்கிடமான செயல்கள் நிகழ்ந்தன. நல்ல திறமையும் புகழும் பெற்று டிபுடிகலெக்டராயிருந்த தந்தையாரும், பின்னர்த் தாயாரும் உலகந் துறந்தனர். ரமேசருடன் பிறந்த சகோதர சகோதரிகள் அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. தாய்தந்தையர்களை இழந்த ரமேசரின் மனத்தில் கவலை புகுந்தது. "இனி என்ன செய்வது!" என்ற எண்ணம் அவர்மனத்தில் தோன்றியது. இந்த எண்ணம் மற்றைப்புதல்வர்களின் மனத்தில் தோன்றியதாகத் தெரியவில்லை. ரமேசர் அறிவுள்ள புதல்வர் அல்லவா?

அப்போது ஷாஜிசந்த்ரர் என்னும் பெயரினையுடைய பெரியார் ஒருவர் இருந்தார். அவர் ரமேசருக்கு நெருங்கிய உறவினர். அவர் ரமேசரையும் அவர்சகோதர சகோதரிகளையும் தமது பாதுகாப்பில் வைத்துக் காப்பாற்றி வரலானார்.

ஷாஜிசந்த்ரர் நன்றாகப் படித்தவர். அவர் எப்போதும் ஒழிந்த வேளைகளில் கல்வியிலேயே கவனத்தைச் செலுத்திக்கொண்டிருப்பார். கல்வியில் அக்கறை கொண்ட அப் பெருமகனார் தமது

பாதுகாப்பில் இருந்த குழந்தைகளின் கல்வியில் அக்கறைகொண்டு அவர்களை ஒரு சிறந்த ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிப் படிக்க வைத்தார். ரமேசரைத் தவிர மற்றைக் குழந்தைகளெல்லாம் ஏதோ ஒருவிதமாகப் படித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், ரமேசர் தம்மோடு படித்த பிள்ளைகள் எல்லாரினுஞ் சிறந்து விளங்கினர். அதைக் கண்ட அவருடைய ஆசிரியரும் ஏனையோரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். அறிவுள்ள பிள்ளைகளை அனைவரும் கொண்டாடுவது இயல்புதானே? ரமேசர் ஒவ்வொரு வகுப்பிலும் நன்ருகப் படித்து முதன்மையாகவே தேர்ந்தார்; எந்த நல்ல காரியத்தைச் செய்யப் புகுந்தாலும் அதில் தாம் திறமையோடு முன்னே நிற்கவேண்டுமென்பது ரமேசரின் கருத்தாகும்.

இவ்விதமேதான் மாணுக்கர்களும் பெரியவர்களும் நினைக்க வேண்டும். ஆனால், எந்த வேலைகளிலும் திறமையோடு முன்னேற வேண்டும். திறமையின்றி, கோள் சொல்லுதல், புறங்கூறுதல் போன்ற இழிந்த வழிகளைப் பின்பற்றி எவரும் முன்னேற நினைத்தல் கூடாது. அவ்வகையில் உண்மையான முன்னேற்றம் எவருக்கும் கிட்டாது; கிட்டினும் நிலைக்காது; நிலைத்தாலும் அதனால் வரும் பலன் உருப்படாது.

ரமேசர் மிக்க திறமையுள்ளவர் என்பது அவருடைய இளம்பருவத்திலேயே நன்கு விளங்கியது.

அவர் ஹேர் (Hare) என்னும் பெயரினையுடைய பள்ளிக்கூடத்தில் படித்தார். அந்தப் பள்ளிக் கூடத்தில் படித்த பிள்ளைகளுள் கல்வியில் சிறந்தவ ராய் விளங்கியவர் நம் ரமேசரே. இதற்கு அத்-தாட்சியாக, ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்காவது ஆண்டில், "மெற்றிகுலேஷன்" பரீட்-சையில் அவரே முதல்வராகத் தேர்ந்தார். பிறகு இராசதானி கலாசாலையில் சென்று படித்தார். அங்கும் அவர் சிறந்தவராகவே விளங்கினர். அங்கு நடந்த எப். ஏ., (F.A.,) பரீட்சையில் இரண்டாவதில் தேர்ந்தார்.

எப். ஏ. பரிசையில் தேர்ந்த காலத்தில் ரமேச-ருக்கு இரண்டு நண்பர்கள் மிக வேண்டியவர்களாய் இருந்தனர். அவர்களுள் ஒருவரின் பெயர் "பிகாரி-லால் குப்தா" என்பது; மற்றொருவரின் பெயர் "சுரேந்திரநாத் பெனர்ஜி" என்பது. ரமேசர் தம் நண்பர்களோடு இங்கிலாந்து முதலிய தேசங்-களுக்குப் போய்வர வேண்டுமென்று அடிக்கடி பேசுவார். அந்த நண்பர்களுக்கும் அந்தக் கருத்து மிகப் பிடித்தமாய் இருந்தது. ஆகலின் அவர்களும் "அப்படிச் செய்வது நல்லதுதான்" என்று சொன்னார்கள். ஆயினும், எண்பது ஆண்டுகளுக்கு முன்னே நமது இந்து சமூகங்களில் கட்டுப்பாடு மிக்க கடுமையாய் இருந்தது. அப்போது, கப்பலேறி அயல்நாடுகளுக்குச் செல்வதென்றால் பெரும்பா-லான குடும்பங்களில் இருந்த வயோதிகர்கள் சம்-

மதிப்பதில்லை. அதனால், ரமேசர் "இதற்கு என்ன செய்வது!" என்று நினைத்தார்; "எவருக்கும் சொல்லாமல் போவோம்; பிறகு தெரிவிப்போம்" என்று தீர்மானித்தார். ஆனால், சுரேந்திரநாத் பெனர்ஜியார் தகப்பனார் மட்டும் அந்தக் காலத்திலேயே சில கருத்துக்களை மீறி நடக்கக்கூடியவராய் இருந்தார். அவர் தம் மகன் கப்பலேறி இங்கிலாந்து செல்வதற்கு விரும்பினதனால் அங்கே சென்று படிப்பதற்கு அனுமதி கொடுத்தார். அப்போதே "ஆசாரம்" கெட்டு விட்டதாக அநேகர் கூக்குரலிட்டனர்.

அதற்குப் பெனர்ஜி தந்தையார், "ஆசாரம் என்பது காலதேச வர்த்தமானங்களை ஒட்டி வாழ்க்கைக்கு ஏற்றதாய் இருக்க வேண்டும். அர்த்தமில்லாமல், உண்மையான முன்னேற்றத்திற்கு இடையூறாய் இருக்கும் ஆசாரம் எனக்கு வேண்டாம்" என்று கூறி, தம் மகனை இங்கிலாந்துக்கு அனுப்பச் சம்மதித்தார். ஆகலின், பெனர்ஜி இங்கிலாந்துக்குப் போவதற்குத் தீர்மானித்துவிட்டார். அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கப்பலில் பெனர்ஜியின் பெயரால் மூன்று பேர் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டன. நண்பர்கள் மூவரும் எல்லாவிதமான துன்பங்களையும் எதிர்த்து இங்கிலாந்துக்குச் சென்று படித்து மேன்மை அடைய வேண்டுமென்று உறுதி கொண்டனர்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்பதற் கேற்ப, அந்த மூன்று நண்பர்களும் வெவ்வேறு துறையில், பிற்காலத்தில், சிறந்தே விளங்கினார்கள். அவர்களுள் சுரேந்திரநாத் பெனார்ஜியாரை நம் நாட்டில் அறியாதவர்களே இருக்க-மாட்டார்கள். பெனார்ஜியார் பத்திரிகை ஆசிரியர், சிறந்த பேச்சாளர், தேசாபிமானி என்று பெயரெடுத்தார். பிகாரி லால் குப்தா என்பவர் கல்-கத்தா "ஹைகோர்ட்" நீதிபதியாக இருந்து விளங்கியவர். இப்படிப்பட்டவர்களல்லவோ ஒருவருக்-கொருவர் நண்பர்களாய் இருக்கவேண்டும்? சாரமற்றவர்கள் நண்பர்களாய் இருந்தென்ன, இல்-லாமல் போயென்ன? ரமேச சந்திர தத்தரோ, மேலே கூறப்பட்ட நண்பர்களைப்போலன்றி, பல துறைகளிலும் வெற்றியுடன் விளங்கியவராவர். அதனால்தான், நம் நாட்டினர் அவரை அதிகமாகக் கொண்டாடுகின்றனர்.

நண்பர்கள் மூவரும் தங்கள் தங்களுக்கு வேண்டியபொருளோடு, ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டாவது ஆண்டில் இங்கிலாந்துக்குக் கப்பலில் பிரயாணமாயினர். இனி, நாம் பெரும்பாலும் ரமேசரின்வரலாற்றைப்பற்றிமட்டும் கவனிப்போம்.

## 2. "இந்தியன் சிவில் சர்விஸ்"

இங்கிலாந்தை அடைந்தவுடன் ரமேசர் அந்த நாட்டின் நிலையை உணர்ந்து அதற் கேற்றபடி நடக்க விரைவில் கற்றுக்கொண்டார். ஆனால், தமது நாடு, குடும்பம் இவைகளின் போக்கை அவர் அடியோடு விட்டுவிட வில்லை. "எந்த நாட்டிலும் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கும். தேனீக்கள் பூவில் இருக்குந் தேனைமட்டும் ஏற்றுக்கொள்வதைப்போல நாம் நமக்கு நன்மைதரக்கூடியவைகளைமட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்னுங் கொள்கையை மேற்கொண்டவர் ரமேசர். ஆகலின், அவர், கண்மூடித்தனமாக ஒருபோதும் நடந்துகொள்ள மாட்டார்.

இங்கிலாந்துக்குச் சென்ற பிறகு ரமேசர் லண்டன் யூனிவர்ஸிடி காலேஜில் சேர்ந்தார். பிறகு அவர், "இந்தியன் சிவில் சர்விஸ்" பரீட்சையில் தேர்வதற்கு விருப்பங்கொண்டு, அதற்கு வேண்டிய தகுதியையும் திறமையையும் பெற்று, ஆயிரத்து எண்ணூற்று அறுபத் தொன்பதாம் ஆண்டில் பரீக்ஷை எழுதினர். அப்போது அந்தப் பரீட்சையில் அவரோடு எழுதியவர்கள் முந்நூறு பெயராவர். அவருள் ஒரு சிலரைத் தவிர, மற்றெல்லாரும் ஆங்கிலேயரே. அந்தப் பரீட்சையில் நம் ரமேசர் மூன்ருவதாகத் தேர்ந்தார். ஆங்கில இலக்கியப் பரீட்சையில் இரண்டாவதாகவும், ஸம்ஸ்கிருதத்தில் முதலாவதாகவும் தேர்ந்தார். இதை அறிந்தவுடன்

ஆங்கிலேயர்கள் அவரைப் பெரிது கொண்டாடி-னார்கள். அறிவுள்ளவர்கள் எந் நாட்டாராயினும், எச் சாதியாராயினும் அவர்களை எல்லாரும் கொண்-டாடுவது இயல்பன்றோ! எக்குடிப் பிறந்தா-லென்ன? யாவரே ஆயினும் என்ன? அறிவுள்ள-வர்களைப் போற்றுவது அறிஞரின் கடமை.

இக்காலத்து மாணக்கர்கள் நமது நாட்டிலே தோன்றிய இத்தகைய பெருமக்களின் பெருமைக்குரிய செயல்களை மனத்தில் கொண்டு வாழ்வார்-களானால், தாங்கள் எவ்வளவோ நலத்தை அடை-வார்கள். ரமேசர்போன்றவர்களின் சரிதங்களைப் படிப்பதனாலும் அவர்கள்செயலை நினைப்பதனாலும் மனவுறுதியும், ஊக்கமும், ஆக்கமும் உண்டாகும் என்பது உண்மை. உலகத்தில் உறுதியும் ஊக்க-மும் உள்ள மக்களாய் வாழாதவர்கள் வாழாதவர்-களே ஆவர். மாணக்கர்கள் நற்குணமுள்ள நன்-மக்களாய்த் திகழவேண்டுமானால், எல்லாருக் கிடை-யிலும் சிறப்பாக விளங்கவேண்டுமானால், பல நல்ல பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும். அவைகளுள் மிகச் சிறந்த பழக்கம் பெரியார்களின் சரிதங்களைப் படிப்பதே ஆகும்.

“இந்தியன் சிவில் சர்விஸ்” பரீட்சையில் தேர்ந்தவுடன் இந்தியாவில் ஏதோ ஓர் உத்தி-யோகத்தைப் பார்ப்பதற்கு உத்தரவு பெற்றுக்-கொண்டு ரமேசர் வந்துவிடவில்லை. இங்கிலாந்தி-லேயே அவர் சிலகாலம் தங்கியிருந்தார். அப்-

போது அவர் அங்கே தமது செலவுக்கு வேண்டிய பொருளை வக்கீல்தொழில் செய்து சம்பாதித்தார்.

ரமேசர் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் அவருக்குச் சிறந்த நண்பர்கள் பலர் ஏற்பட்டனர். பல ஆங்கிலேயர்களுடைய உயர்குடும்பங்களிலும் அவருக்கு நல்ல மதிப்புக் கிடைத்தது. அக் குடும்பத்தினர் ரமேசரை அடிக்கடி தங்கள் இல்லங்களில் கௌரவத்துடன் வரவேற்றனர். அதனால், ரமேசர் ஆங்கிலேயர்களின் சரியான பழக்க வழக்கம் இன்னதென்பதையும் குணதிசயம் இப்படிப்பட்டதென்பதையும் நன்கு தெரிந்துகொண்டார். அக்காலத்தில் அவரைப்போல ஆங்கிலேயர்களின் நாகரிகம் இப்படிப்பட்டது என்பதை அறிந்துகொண்டவர்கள் இந்தியர்களுள் சிலரே யாவர். இப்படி அவர் ஆங்கிலேயர்களைப்பற்றித் தெரிந்துகொண்ட செய்திகள், பிற்காலத்தில் அவருக்கு எவ்வளவோ நன்மையைச் செய்தன. எந்த அநுபவமும் உலகில் வீணாவதில்லையே!

ரமேசர் இப்படிப் பலரோடும் பழகிய காரணத்தினால் கல்வியறிவோடு உலகஅனுபவத்திலும் சிறந்து விளங்கினார். கல்வியும் அனுபவமும் ஒருங்கே ஒருவரிடத்தில் இருக்குமானால் அவரே சிறந்தவராய்த் திகழ்வார் என்பதில் தடை என்ன?

# 3. பெரியோர் நட்பு

ரமேசர் இங்கிலாந்தில் இருந்த காலத்தில்தான் அவருக்குஅரசியலைப்பற்றிய உணர்ச்சி ஏற்பட்டது. அதற்குக் காரணமென்ன? ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டாவது ஆண்டில் "பார்லிமெண்டு" சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய "எலக்ஷன்" மும்முரமாக நடைபெற்றது. அப்போதுதான் தாராளக்கட்சி என்று சொல்லப் படும் "லிபரல்" கட்சி அதிகாரத்திற்கு வந்தது. அப்போதுதான், இங்கிலாந்திலே இருந்த சிறந்த முதன்மந்திரிகளுள் ஒருவராக மதிக்கப்பட்ட கிளாஸ்டன்(Mr. Gladstone)என்பவர் முதன்முதல், பார்லிமெண்டின் முதல்மந்திரி யானார். அந்த வைபவங்களையெல்லாம் ரமேசர் நேரில் கண்டவராவார். அவர் அடிக்கடி "காமன்ஸ்" சபைக்குச் சென்று "கிளாஸ்டன்", "டிஸ்ரேலி" முதலிய அறிஞர்கள் பேசுவதையெல்லாம் கேட்பார். அதனாலும் அவருக்கு உலகஞானம் வளர்ந்தது என்று கூறலாம்.

அந்தக் காலத்தில் இங்கிலாந்தில் சிறந்து விளங்கிய பெரிய நூலாசிரியர்களாகிய "ஜான் ஸ்டுவர்ட்மில்" "சார்லஸ் டிக்கன்ஸ்" முதலியவர்களுடைய பழக்கமும் ரமேசருக்குக் கிடைத்தது. அதனால், ரமேசர் தாமும் நூல் எழுதவேண்டும் என்று தீர்மானித்தார். அந்தத் தீர்மானமே பிற் காலத்தில், அவர் செய்து வந்த பல வேலைகளுக்

கிடையில் அவரை நூலாசிரிய ராக்கியது. இதற்கெல்லாம் அவருக்கு ஏற்பட்ட நல்லறிஞர்களின் பழக்கமன்றோ காரணம்!

ரமேசர் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் அவருக்கு எத்தனையோ பெருமக்களாகிய கல்வியாளர்கள், பிரபுக்கள் முதலியோர் நண்பராயினர். ஆண்டில் இளைஞராயினும் ரமேசர் அறிவில் முதிர்ந்தவராய் இருந்தபடியால், அவர்நட்பை அந்த ஆங்கிலேயர்களும் விரும்பினார்கள்.

## 4. உண்மையுள்ள உழைப்பாளர்

ரமேசர் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வரவேண்டுமென்று எண்ணினர். அவரோடு இங்கிலாந்துக்குச் சென்ற அவருடைய நண்பர்களும் கல்வியில் தேர்ந்து அவரைப்போலவே நல்ல உலக அனுபவத்தையும் ஒருவாறு பெற்று இந்தியாவுக்குத் திரும்புவதற்கு ஆயத்தமானார்கள். ஆனல் அவர்கள் மூவருக்கும் ஐரோப்பாவில் வேறு சில நாடுகளையும் பார்க்க வேண்டும் என்னும் எண்ணம் தோன்றியது. ஆதலின், அவர்கள் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு பிரான்ஸ், ஜர்மனி, ஸ்விட்ஜர்லாந்து, இத்தாலி முதலிய தேசங்களைச் சுற்றிப் பார்த்தார்கள்; ஆங்காங்குள்ள இயற்கைக்காட்சிகளைக் கண்டு களித்தார்கள்; மக்களின் பழக்க

வழக்கங்களையும் ஒருவாறு உணர்ந்தார்கள். இப்படி அவர்கள் பிரயாணம் செய்கையில் பிரான்ஸ்தேசத்தில் வேடிக்கையான ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தது. இந்த நண்பர்கள் மூவரையும் பிரான்ஸ்தேச அதிகாரிகள் யாரோ ஒற்றர்கள் என்று தவறுக நினைத்துக் கைது செய்து காவலில் வைத்துவிட்டார்கள். பிறகு அவர்கள், தவற்றை உணர்ந்து மறுநாட் காலை இவர்களை விடுதலை செய்துவிட்டார்கள். ரமேசருக்கும் அவர்நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சி துன்பத்திற்குப் பதிலாகத் தாங்கள் அடிக்கடி பேசி மகிழ்வதற் கேற்ற இன்பநிகழ்ச்சியாகவே தோன்றியது.

ஐரோப்பாவில் பல இடங்களையும் சுற்றிப் பார்த்த பிறகு ரமேசர் தம் நண்பர்களோடு இந்தியாவுக்கு வந்தவுடன், முன்னரே அரசாங்கத்தினரால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தபடியால், " இந்தியன் சிவில் சர்வி "ஸில் நியமனம் பெற்ருர். தமக்குத் தரப்பட்ட எல்லா வேலைகளையும் அவர் திறமையாகவே செய்துவந்தார். வங்காளத்தில் பல ஜில்லாக்களில் அவர் தொடர்ச்சியாக, ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தோராம் ஆண்டுமுதல் ஆயிரத்து எண்ணூற்று எண்பத்திரண்டாவது ஆண்டு வரையில், பதினேர் ஆண்டளவும் " சிவில் சர்வி "ஸில் அரும்பாடு பட்டு உழைத்தார். எங்கெங்குப் பொதுமக்களுக்குக் கடினமாக உழைக்கவேண்-

டுமோ அங்கங்கெல்லாம் அவர் ஓயாமல் வேலை செய்துகொண்டே இருந்தார். அதற்கெல்லாம் ரமேசர் சிறிதும் சலிப்பதே இல்லை. கடமைக்காக அன்று, மக்களுக்காக உழைக்கவேண்டுமென்னும் உற்சாகத்தோடும் அவர் வேலை செய்துவந்தார். அதனால்தான் அவர் செய்த எந்த வேலையும் சிறப்பாக விளங்கியது. கடமைக்காக, விருப்பம் இல்லாமற் செய்யும் எந்த வேலையும் சிறக்காது. ஆகலின் எவரும் தாம் செய்யும் வேலையை உற்சாகத்தோடு செய்தல் வேண்டும்.

காலரா, பஞ்சம், புயல் இவைகளாலும் பிற காரணங்களாலும் எங்கெங்குத் துன்பம் உண்டாகிறதோ அங்கங்கெல்லாம் ரமேசர் அனுப்பப்படுவார். அவரும் மகிழ்ச்சியோடு சென்று தமது வேலையைக் கவனித்து மக்களுக்கு நன்மைசெய்வார். அதனல், ரமேசர் எந்த ஜில்லாவுக்குப் போகிறாரோ அந்த ஜில்லாவாசிகள் மகிழ்ச்சி யடைவதும், அவர் எந்த ஜில்லாவை விட்டு நீங்குகிறாரோ அந்த ஜில்லாவாசிகள் "ரமேசர் போய் விடுகிறாரே" என்று வருத்தப்படுவதும் வழக்கமாயின.

ரமேசர் பெரும்பாலும் பஞ்ச நிவாரண வேலைகளையே செய்துவந்தார். எங்கெங்குப் பஞ்சமும் பட்டினியும் ஏற்படுகின்றனவோ அங்கங்கெல்லாம் அவர் மக்களுக்கு உதவி செய்வதற்காக அனுப்பப் பட்டார். அவரும் மகிழ்ச்சியோடு அவ் வேலைகளைச் செய்துவந்தார். அவர்விருப்பமும் அத்-

தகைய வேலைகளைச் செய்வதுதான். விருப்பத்திற் கேற்ற வேலையே அவருக்குக் கிடைத்தது. எந்த வேலையாய் இருந்தாலும் அதற் கேற்றபடி தமது மனத்தை மாற்றிக்கொள்ளுவதில் ரமேசர் சமர்த்தர். இல்லாவிடில், அவர் பல துறைகளிலும் உழைத்திருக்க முடியாது.

கங்கைநதியின் முகத்துவாரத்தில் உள்ள சபாஷ்பூர் என்னும் ஊரிலும் இன்னும் பல ஊர்களிலும் மழையும், தாங்கமுடியாத அளவுக்குப் புயற்காற்றும் ஏற்பட்டதனுல் ஆயிரக் கணக்கான மககள் மாண்டனர். அதே சமயத்தில் கங்கையின் பிரவாகமும் மழையின் வேகத்தினுல் ஏற்பட்ட வெள்ளமும் சேர்ந்து பல ஊர்களைப் பாழ்படுத்தின. எங்கும் உணவுப்பொருள் இல்லாமல் போயிற்று. கடுங் காற்றினுலும் புயலினுலும் மாண்டவர்களைத் தவிர, பசியாலும் "காலரா" முதலிய கொடிய நோய்களாலும் மாண்டவர்களின் தொகை ஆயிரமாயிரம் ஆகும்.

மேற் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களில் மக்களுக்கு உதவி செய்வதற்காக ரமேசர் அனுப்பப்பட்டார். அப்போது உத்தியோகத்தில் ஐந்துவருடகால அநுபவந்தான் அவருக்கு இருந்தது. இருந்தாலும், அவர் தனிமையாகவே உழைத்து, மக்களுக்கு வேறு எவராலும் செய்யமுடியாதஅளவிற்குப் பலவித நன்மைகளைச் செய்தார்; மக்கள் குடியிருந்த இடங்களை

நன்ருகச் செம்மைப்படுத்தினர்; அமைதியும் செல்வ-மும் எங்கும் நிலைக்கச் செய்தார். அதனல் மக்கள் அவரைப்பற்றியே எங்கெங்கும் பேசலாயினர். அவரைப் புகழாதவர்கள் இல்லை. அந்தக்காலத்-தில் அரசாங்கஉத்தியோகஸ்தரா யிருந்துகொண்டு, மக்களின் முழுமதிப்பையும் பெற்றவர்கள் எல்-லாரினும் ரமேசரே சிறந்தவராவர்.

ரமேசர் நல்ல சுறுசுறுப்புள்ளவர்; சிறிது நேரமும் சும்மா இருக்கமாட்டார்; இரவில் உறங்-குஞ் சிறிதுநேரந் தவிர, மற்ற நேரங்களிலெல்லாம் தொழிலைக் கவனித்துக்கொண்டே இருப்பார்.

---

## 5. நூலாசிரியர்

ரமேசருக்கு வெகு நாட்களாகத் தாமும் நூலாசிரியராய் விளங்கவேண்டும் என்னும் ஆவல் இருந்தது. அவர் இங்கிலாந்தில் இருக்கும்போதே அவருக்கு இத்தகைய எண்ணம் ஏற்பட்டதென்று முன்னரே சொல்லியிருக்கிருேமன்றே!

ரமேசர் தமக்குத் தெரிந்த எந்தச் செய்தி-களையும் வீணுக்காமல் வெளியிட வேண்டும் என்-னும் எண்ணம் உள்ளவர். ஆதலின், அவர், தமது ஆங்கிலநாட்டு அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதி, "ஐரோப்பாவில் மூன்று வருடம்" என்னும் பெய-ரால் ஒரு புத்தகம் வெளியிட்டார்.

ரமேசர்காலத்தில்தான் வங்கமொழியில் நாவலெழுதுவதில் பிரசித்தி பெற்றவராகிய "பக்கிம் சந்த்ர சட்டர்ஜி" என்பவர் வாழ்ந்துவந்தார். வங்க மொழியில் வசன நடையின் உயர்வுக்கு முதன்முதலில் பாடுபட்டவர்களுட் சிறந்தவரென்று சட்டர்ஜியைத்தான் சொல்லலாம். ரமேசருக்கு அவர் நெருங்கிய நண்பராய் இருந்தார். ரமேசர் நூல் எழுதத் தொடங்கியிருக்கிறார் என்பதை அறிந்த சட்டர்ஜி அவரை நோக்கி, "தாங்கள் இனி எதை எழுதினாலும் நமது தாய்மொழியாகிய வங்கமொழியில் எழுதுங்கள். பிறகு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விடுங்கள். அப்பொழுது அந்த ஆங்கிலநூலுக்கு முதல்நூல் வங்கமொழியில் இருக்கின்றது என்று எல்லாரும் சொல்வார்கள். அதனால், நமது வங்கமொழிக்குப் பெருமை ஏற்படும்" என்று சொன்னார்.

இதைப் படிப்பவர்கள், வங்காளிகளின் மொழிப்பற்றைக் கவனிக்கவேண்டும். நமது தேசத்தில், இன்றைக்கும், வங்காளிகளைப்போல மொழிப்பற்றுள்ளவர்கள் வேறு எவரும் இல்லை என்பது உயர்வுநவிற்சி யாகாது. நம்மக்களின் மொழிப்பற்றுக்கும் வங்காளிகளின் மொழிப்பற்றுக்கும் எவ்வளவோ நெடுவாசி இருக்கின்றதே!

தம்மை நோக்கிச் சட்டர்ஜி சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடனே ரமேசர் அவரிடம், "எனக்கு வங்கமொழியின் இலக்கிய நடை (Style

இப்படிப்பட்டதென்பதே தெரியாதே! நான் எப்படி எழுதுவது!'' என்று சொன்னர்.

"நடையா! உங்களைப்போல விஷயஞானம் உள்ளவர்களுக்கு, எழுத ஆரம்பித்தவுடனே, நடை தானே வந்து விடுமே'' என்று சொல்லி வங்க-மொழியில் எழுதும்படி உற்சாகப்படுத்தினர் சட்டர்ஜி.

சட்டர்ஜி இவ்வாறு உற்சாகப்படுத்தியிரா-விட்டால் ரமேசர் தமது தாய்மொழியில் எதையும் எழுதியே இருக்கமாட்டார். சட்டர்ஜியைப் போன்ற பெருங்குணம் படைத்தவர்கள் வெகு சிலரே. "இவனுக் கென்ன தெரியும்! இவன் என்ன எழுது-வான்'' என்று அறிவுள்ளவர்களைப்பற்றி இகழ்-வோர் சட்டர்ஜியின் தன்மையைக் கவனிப்பார்-களாக.

சட்டர்ஜியின் தூண்டுதலால் புதிய ஊக்கத்-தைக் கொண்ட ரமேசர் அன்றுமுதல் "பழைய கால இந்தியா'', "இந்திய இதிகாசங்கள்'' என்-னும் நூல்களை வங்கமொழியில் எழுதத்தொடங்-கினர். வங்கமொழியில் அவர் சிறந்தபல நூல்-களை எழுதினர். ஆயின், கல்வியாளரைத் தவிர, மற்றவர்கள் அவரை மதித்தமைக்குக் காரணமாய் இருப்பவை அவர் எழுதிய 'நாவல்'களேயாகும். அவர் பெரும்பாலும் சரித்திரசம்பந்தமான நாவல்-களையே எழுதியுள்ளார். அவைகளுள் முக்கிய-மானது, "ஆக்ராவின் அடிமைப்பெண்'' என்ப

தாகும். அவர் எழுதிய சீர்திருத்த சம்பந்தமான நாவல் "பனங்குளம்" என்பது.

இப்படியாக ரமேசர் நூலாசிரியராயும் விளங்குவதைக் கண்ட அவர் நண்பரொருவர் ரிக் வேதத்தை வங்கமொழியிலே மொழிபெயர்க்கச் சொன்னர். அவர் சொல்லியபடியே ரமேசர் ரிக் வேதத்தை மொழிபெயர்க்கத் தொடங்கினர். அப்போது "பிராமணரல்லாதவராகிய ரமேசர் வேதத்தைத் தொடவுங் கூடாது" என்று சில பிராமணர்களும் பிராமணரல்லாதவர்களும் பலவிதமாக ஆட்சேபம் செய்தார்கள். ரமேசர் ஆட்சேபக்காரர்களைக் கவனியாமல் அவ் வேலையைச் செய்து முடித்தார். அதையறிந்து, அந்தக் காலத்திலே, ஆங்கிலேயர்களில் ஸம்ஸ்கிருதம் படித்துத் தேர்ந்தவராகிய பேராசிரியர் மாக்ஸ்முல்லர்என்பவர் மகிழ்ச்சி யடைந்தார்.

இவ்வாறு ரமேசர் தமது பல வேலைகளுக்கிடையில் சிறந்த நூல்களை எழுதி, நூலாசிரியர் என்றும் பேர் பெற்ருர்.

எத்தனையோபேர் ஏதாவது ஒரே ஒரு வேலையைக்கூட ஒழுங்காகச் செய்யாமல், செய்யாமைக்கு ஏதாவது ஒரு காரணத்தை கற்பிப்பதற்குமட்டும் ஆயத்தமாய் இருக்கிருர்கள். அத்தகையோரால் அவர்களுக்கும் நாட்டுக்கும் என்ன நன்மை உண்டாகும்!

# 6. "வைஸ்ராய்" மதிப்பு

உத்தியோகத் துறையிலும் ரமேசர் மிக நன்ருக உழைத்து, "சிறந்தவர்" என்று பெயரெடுத்தார். அந்தக் காலத்தில், ஜில்லாக்களில் பெரிய அதிகாரஸ்தானங்களில் இந்தியர்களை நியமித்தால் கெடுதல் விளையுமோ என்று ஆங்கிலேயர்கள் சந்தேகிக்கலானர்கள். அதே காலத்தில்தான் ரமேசர் ஜில்லாஅதிகாரியாகப் பல ஆண்டுகள் இருந்திருக்கிருர்.

அந்தக் காலத்தில் அடங்காப்பிடாரிகள் நிறைந்திருந்த இடம் "பரிசால்" அல்லது "பாக்கர் கஞ்ச்" என்று சொல்லப்படும் ஜில்லா என்பர். அந்த ஜில்லாவில் இரண்டுவருடகாலம் ரமேசர் ஜில்லா-அதிகாரியாய் இருந்தார். அவர்காலத்தில் அவருடைய திறமையினல் அந்த ஜில்லா ஒழுங்கு பட்டது.

அப்போது, இந்தியர்களிடம் பேரன்பு கொண்டவராகிய "லார்டு ரிப்பன்" என்பவர் இந்தியாவின் வைஸ்ராய் பதவியில் இருந்தார். அவர், நமது ரமேசரைப்பற்றிக் கேள்விப்பட்டார். உடனே அவர் ரமேசருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினர்.

"நான் உங்களை அழைக்கிறேன். நான் இந்தியாவை விட்டுப் போவதற்குமுன்னரே உங்களைப் பார்க்க விரும்புகிறேன். உங்களைப்பற்றி நன்ருக அறிந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். உங்களைப்பற்றி இங்கிலாந்திலுள்ளவர்கள்

நன்றாக அறிய வேண்டும். அறிந்தால் இந்தியர்கள் உயர்ந்த உத்தியோகங்களை வகிப்பதற்குத் தகுதியானவர்கள் என்னுங் கருத்துக்கு மாறுபாடே இருக்காது.”

ரிப்பன் பிரபு எழுதிய இந்தக் கடிதம் ரமேசர் எவ்வளவோ சிறந்தவர் என்பதை வெளிப்படுத்துகின்றதன்றோ! முயற்சியுள்ளவர்களை, திறமையுள்ளவர்களை, யார்தாம் புகழமாட்டார்கள்! ‘அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்’ அன்றோ! ரமேசர் வங்காளத்தில் குடியானவர்கள் படுந் துன்பத்தையும் சில ஜமீன்தார்கள் தங்கள்நிலத்தில் வேலைசெய்யுங் குடிகளுக்குப் புரியும் இன்னல்களையும் நன்கு அறிந்தார். அதனால், அவர் குடியானவர்களை ஆதரித்து ஒரு புஸ்தகம் எழுதினர்; அவர்களுக்காக இடைவிடாமல் உழைத்தார். இறுதியில், அவர்முயற்சியின் பலனாக வங்காளக்குடியான வர்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில், “வங்காளக் குடிவார மசோதா” என்னும் ஒரு சட்டம் செய்யப்பட்டது. அன்றுமுதல் வங்காளக் குடிகள் படிப்படியாக நன்மை அடையலானார்கள்.

---

## 7. இலக்கியச் சங்கம்

ரமேசர் பலமுறை இங்கிலாந்துக்குச் சென்றிருக்கிறார். இரண்டாவது முறையாக அவர் இங்கிலாந்துக்குச் சென்றபோது அவர், தம் மனைவியையும் மக்களையும் தம்முடன் அழைத்துச் சென்றார்.

அப்போது அவர் ஆலந்து, ஆஸ்திரியா, ஜர்மனி, சுவீடன், நார்வே, பெல்ஜியம், இத்தாலி, முதலிய பல நாடுகளைப் பார்த்தார். அதனால், அவர் எவ்வளவோ அனுபவங்களைப் பெற்றார்.

அவர் இந்தியாவுக்கு வந்தவுடன், "பப்ன" என்னும் இடத்தில் வேலை பார்த்தார். அப்போது வங்காளத்தில் மிகப்பெரிய ஜில்லாவாகிய "மைமன்சிங்"கில் இருந்த ஒரு வெள்ளைக்காரக் கலெக்டரின் தவறான செய்கையினால் இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் இடையில் மனஸ்தாபம் ஏற்பட்டு வளர்ந்தது. உடனே, அந்த ஜில்லாவுக்கு ரமேசர் அனுப்பப்பட்டார். அவர் தமது அறிவின் வன்மையினால், இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் ஒற்றுமையை ஏற்படுத்தினார். அதனால் இந்துக்களும் முகம்மதியர்களும் அவரைக் கொண்டாடினார்கள். ரமேசர், அவர்களுக்குப் பல நன்மைகளையும் செய்தார்.

அரசாங்கத்தாரால் அனுப்பப்பட்டு, பர்த்வான்போன்ற சம்ஸ்தானங்களையும் அவர் முன்னுக்குக் கொண்டுவந்தார். மிட்னப்பூர், டினஜ்பூர் முதலிய இடங்களிலும் அவர் பல நன்மைகளைச் செய்திருக்கிறார். முக்கியமாக, வங்காளத்தின் பல ஜில்லாக்களில் அதிகாரியாய் இருந்து அவர் உழைத்த உழைப்பிற்கு அளவே இல்லை. அரசாங்கத்தினர் அவருக்கு ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டாவது ஆண்டில், அவர்-

பெருமையைத் தாங்கள் உணர்ந்துகொண்டமைக்கு அடையாளமாக, ஸி. ஐ. இ. என்னும் பட்டத்தை அளித்துப் பாராட்டினர்.

ஓயாத உழைப்பின் காரணமாகவும், "மலேரியா"வை உண்டாக்கக் கூடிய நிலையை யுடைய பர்த்வான், மிட்னப்பூர் முதலிய இடங்களில் வேலை பார்த்தமையாலும் ரமேசர் அடிக்கடி நோயினால் பீடிக்கப்பட்டார். அதனால், அவர் உடல்நலங் கருதி ஜர்மனிக்குச் சென்று நல்ல சிகிச்சை பெற்று, இந்தியாவுக்குத் திரும்பினர்.

ரமேசர் உடல்நலம் பெற்று இந்தியாவுக்குத் திரும்பியவுடன் அவர் செய்த ஒரு நல்ல வேலையை இங்கே குறிப்பிடுவோம். வங்கமொழியில் இருக்கும் இலக்கியங்களைக் காப்பாற்றுவதற்காகவும், நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய புதிய இலக்கியங்களை வங்கமொழியில் இயற்றுவதற்காகவும் "வங்க சாகித்திய பரிஷத்" என்னும் பெயரால் ஒரு சங்கத்தை அவர் ஏற்படுத்தினர். இன்றைக்கும் தாய்மொழியின் வளர்ச்சியைக் கருதி நம்நாட்டில் உள்ள பல சங்கங்களுள் அது தலைசிறந்து விளங்குகிறது. வங்காளிகள்—சிறப்பாக வங்கமொழிப்புலவர்கள்-ரமேசரை இன்றும் கொண்டாடுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். அரசாங்கத்தில் பெரும் பதவிகளில் உள்ளவர்களும், செல்வர்களாய்த் தமிழ்நாட்டில் வாழ்கின்றவர்கள்எல்லாரும் இதைக் கவனிப்பார்களாக.

ரமேசர் "கலெக்டர்" பதவி முதலிய பல உத்தியோகங்களை எல்லாரும் புகழும்படி செய்து, உத்தியோகத்திலிருந்து விலகினர். இருபத்தாறு வருட காலந்தான் அவர் வேலை பார்த்தார். ஆயின், முப்பது வருடகாலம் வேலையில் இருந்தவர்கள் செய்ததைப்பார்க்கினும் அவர் பன்மடங்கு அதிக-மான வேலையைச் செய்திருக்கிறார். இங்கு மற்-றொரு செய்தியை நாம் கவனித்தல் வேண்டும். மக்-கள், அந்தக் காலத்தில் அரசாங்க உத்தியோகஸ்-தர்கள்எல்லாரிடத்திலும் அதிக அன்பு கொண்-டிருந்தார்களா, இல்லையா என்பது ஆராயவேண்-டிய செய்தி. ஆனல், குடியானவர்கள் முதல் எல்-லாரும் ரமேசரைத் தங்கள் தந்தையாகவும், சகோதரராகவும் கருதினர்கள். காரணம் என்ன? ரமேசர் தாம் பெரிய உத்தியோகத்திலிருப்பதை எண்ணி இறுமாப்புக் கொள்ளவில்லை. சில அர-சாங்க உத்தியோகஸ்தர்கள் குடியானவர்களுக்கு எழுதுகின்ற சில கடிதங்களில் "உங்கள் ஊழியன்" என்று எழுதி, அதன்கீழ், தங்கள் கையெழுத்தை இடுவார்கள். அவர்களுட் சிலர் எழுதவேண்டிய-தொரு முறையை அனுசரித்து அவ்வாறு எழுது-கிறர்களே தவிர, உண்மையில், தங்களைக் குடி-யானவர்களின் ஊழியர்களாக நினைக்கிறர்கள் என்பது சந்தேகமே! ஆனல், ரமேசர் உண்மை-யிலேயே, பொதுமக்களின் ஊழியர் என்று தம்-மை நினைத்துக்கொண்டு பொதுமக்களுக்காக

உழைத்துவந்தார்; நியாயத்திற்கு விரோதமில்லாமல் பொதுமக்களுக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்ய முடியுமோ அவ்வளவு நன்மைகளையும் சுயநலம் சிறிதும் கருதாமல் செய்தார். அவருடைய இத்தகைய உண்மையான உழைப்பே அவர் இன்றைக்கும் மேலானவர் என்று மக்களால் மதிக்கப்படுவதற்குக் காரணமாகும். பிற்காலத்தில், பெரும் பதவிகளை வகிக்கப்போகும் மாணுக்கர்கள் இதைத் தங்கள் மனத்தில் மறவாமல் வைத்துக்கொள்வார்களாக.

மற்றுமொரு செய்தி இங்கே கவனிக்கத் தக்கது. ரமேசர் அந்தக்காலத்தில் தம் கீழிருந்து ஆங்கிலேயர் வேலை செய்ய, தாம் அவர்களினும் உயர்ந்த பதவியிலிருந்து வேலை செய்திருக்கிறுர்.

ரமேசர் வங்காள சட்டசபையின் அங்கத்தினராய் இருந்து பொதுமக்களுக்காகப் பல நன்மைகளைச் செய்திருக்கிறுர். அவருக்கிருந்த பலவித அனுபவங்கள் அவர் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசுவதற்கும் உதவியாய் இருந்தன.

---

# 8. சரித்திர ஆசிரியர்

வயது ஐம்பத்தைந்து நிறையும் வரையிலும், ஏன், அதற்கு மேலுங்கூட, அரசாங்கத்தில் வேலைசெய்ய வசதி இருந்தும், ரமேசர் பொதுமக்களுக்குத் தம் விருப்பம்போல் உழைக்கவேண்டு

மென்னும் எண்ணம் காரணமாகவும், மேலும் பல நூல்களை எழுதவேண்டுமென்று தமக்குள்ள இயற்கையான விருப்பங் காரணமாகவும் ஐம்பத்தைந்து வயது நிரம்புமுன்னரே தமது உத்தியோகத்திலிருந்து விலகினர். அதாவது, ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றேழாவது ஆண்டு அவர் தமது உத்தியோகத்திலிருந்து விலகினர். அவர் அதற்கு முன்னரே "பழைய இந்தியாவின் நாகரிகம்" என்பது முதலிய பல நூல்களை யெழுதி வெளியிட்டிருந்தார்.

ரமேசர் உத்தியோகத்திலிருந்து விலகிய அவ்வாண்டில் இங்கிலாந்துக்குச் சென்றார். இந்த முறை இங்கிலாந்தில் அவர் சற்றேறக்குறைய ஏழுவருடகாலம் தங்கியிருந்தார். இந்தியமக்களுக்கு உழைப்பதற்காக வேலையைவிட்டு விலகியவர், இங்கிலாந்தில் இருந்தமைக்குக் காரணம் என்ன? இந்தியமக்களின் நன்மைக்காகத்தான் அவர் இங்கிலாந்தில் இருந்தார். எப்படி?

அந்தக் காலத்தில் இந்தியர்களைப்பற்றி இங்கிலாந்திலிருந்த பொதுமக்களுக்குச் சரியாக ஒன்றுந் தெரியாது. ரமேசர் இம்முறை இங்கிலாந்துக்குச் சென்றபோது, "லண்டன் யூனிவர்சிடி காலேஜு"க்கு இந்திய சரித்திரப் பேராசிரியர் ஒருவர் தேவையாய் இருந்தது. அந்த வேலையை ரமேசர்

ஒப்புக்கொண்டு நமது நாட்டின் அருமை பெருமைகளை, கேட்போர் வியக்குமாறு போதித்துவந்தார். பல பொதுமேடைகளிலும் அடிக்கடி இந்தியாவின் சிறப்பியல்புகளைப்பற்றிப் பேசி, இங்கிலாந்துமக்களின் மனத்தில், இந்தியர்களைப்பற்றிச் சிறந்த எண்ணத்தை உண்டாக்கினர். இது அவர் நமது நாட்டுக்குச் செய்த பெரிய நன்மை அன்றோ ! இவ்வளவேயோ ! அப்போது ரமேசரைப்பார்க்கினும் வயதில் முதிர்ந்தவர்களான "டபிள்யூ. ஸி. பானர்ஜி" என்பவரும், "தாதாபாய் நௌரோஜி" என்பவரும் இந்தியர்களின் நன்மைக்காக இங்கிலாந்தில் உழைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் தாதாபாய் நௌரோஜி என்பவர் முதல்இந்திய அங்கத்தினராக, "பொது மக்கள் சபை" என்று சொல்லப்படும் " ஹவுஸ் ஆவ் காமன் " ஸில் (House of Commons) இருந்து இந்தியாவுக்கு உழைத்தவர். இவர்களோடு சேர்ந்து இந்தியாவின் நன்மைக்காக ரமேசர் பல வேலைகளைச் செய்தார்.

இவ்வேலைகளால் ரமேசர் தமது எழுத்து வேலையை மறந்தவரல்லர். அந்த வேலை அவருக்கு உயிர் போன்றது. நமது நாட்டின் சிறப்பை விளக்கவல்ல பல பாடல்களை ஆங்கிலத்தில் அவர் மொழிபெயர்த்தார். பாரதராமாயணங்களையும் அவர் ஆங்கிலத்தில் வரைந்தார். அவைகள் ஆயிரக்கணக்கில் விற்பனை ஆயின. அவர் தமது

தாய்மொழியையும் மறக்கவில்லை. "வங்க மொழியின் இலக்கியம்" (Literature of Beugal) என்னும் பெயரால் ஒரு சிறந்த நூலை ஆங்கிலத்தில் எழுதி ஆங்கிலேயர்களிடையில் வங்கமொழிக்குப் பெருமை தேடினர். ஆங்கிலத்தில் தாங்கள் வல்லவர்கள் என்று சொல்லுந் தமிழர்கள் இதைக் கவனிக்க-வேண்டும்.

இப்படியாகப் பல துறைகளில் ரமேசர் உழைத்தார். அவரைப்போல, பல துறைகளிலும் உழைத்த இந்தியர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். மாணக்கர்கள் இதைக் கவனித்து, ரமேசரைப்போல் தாங்களும் உழைக்க முன்வரு-வார்களானல் நமது நாடு உண்மையான முன்-னேற்றத்தைப் பெறும்.

ரமேசர் இங்கிலாந்தில் இருந்தகாலமெல்லாம் நம்மவர்களின் நன்மைக்காகப் பெரிது பாடு பட்டார்; மறுபடியும் நமது நாட்டுக்கு வந்தார். வந்தபிறகு, "இந்தியர்களின் வாழ்க்கை ஐரோப்-பியர்களின் வாழ்க்கை யாகக்கூடாது. இந்தியர்-களுக்குத்தான் இந்தியர்களின் தேவை தெரியும். ........ ஆளுதற்குரிய அதிகார ஸ்தானத்தில்—கவர்னர்சபையிலும் வைஸ்ராய்சபையிலும் —இந்தியர்கள் இருக்கவேண்டும் ..........." என்பன போன்றவற்றை ரமேசர் எடுத்துரைத்திருக்கிறர். அடிக்கடி நாட்டின் நலத்தைக் கருதி அவர் செய்துள்ள பிரசங்கங்கள் அளவில்லாதன.

"இந்தியா எப்படி ஆளப்படவேண்டும்" என்பதைப்பற்றி அப்போது வைஸ்ராயாய் இருந்த "லார்டு கர்ஸான்" என்பவருக்கும் ரமேசருக்கும் சம்பாஷணை நடந்தது. "இந்தியா ஒரேமனிதனால் ஆளப்பட்டால் பொருத்தமாய் இராதா?" என்று கர்ஸான் பிரபு கேட்டார். "அப்படி ஆளப்படுவது சரியன்று; பலருடைய ஆலோசனையோடுதான் ஆளப்படல் வேண்டும்" என்று ரமேசர் வலியுறுத்திக் கூறினர்.

---

# 9. கைத்தொழில்

இந்திய சீர்திருத்தத்தைப்பற்றி "லார்டு மார்லி" போன்ற பிரபுக்களிடம் ரமேசர் பேசியிருக்கிறார். ஆங்கிலேயர்களிடம் ரமேசர்வார்த்தைக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. காரணம் என்ன? அவர் எதைச் சொன்னாலும் கேட்பவர்கள் மறுக்க முடியாத வகையில் சொல்லுவார்.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்பது உண்மையுரை அன்றோ!

அந்தக் காலத்தில்தான் இந்தியாவின் மற்றொரு சிறந்த பெரியாராகிய கோகலே என்பவர் இருந்தார். அவரும் ரமேசரைப்போலவே சிறப்பாக மதிக்கத் தகுந்தவர். வயதில் அவர், ரமேசரைக்காட்டிலும் இளையவர். ஆனல், எண்ணத்

தில், பேச்சில், உழைப்பில் அவர் ரமேசரை ஒத்தவராய் இருந்தார். கோகலேயும் ரமேசரைப் போலவே அவசரப்படாதவர்—மிதவாதி. எவ்வகையிலும் இருவருக்கும் கருத்து ஒன்ருயிருந்தமையால் இருவரும் பல விஷயங்களில் ஒன்ருகச் சேர்ந்து உழைத்ததும் உண்டு. இது நிற்க.

ரமேசர் நமது நாட்டுக் கைத்தொழிலே மறக்காமல் அதற்காக அரும்பாடு பட்டிருக்கிருர். அவர், தாம் பல நாடுகளேப் பார்த்த அனுபவத்தோடு நமது நாட்டைக் கவனித்தார். நமதுநாட்டில் நல்ல கைத்தொழில்களெல்லாம் நசித்துப்போய் இருப்பதையும், பிற நாட்டில் சாதாரணக் கைத்தொழில்களெல்லாம் ஓங்கிஇருப்பதையும் அவர் உணர்ந்தார்; பழைய காலத்தில் நமது நாட்டில் கைத்தொழில் இருந்த நிலேயை நினேத்தார். நமது நாட்டில் தலேசிறந்து விளங்கிய நூல்நூற்றல், நெய்தல், சாயம்ஊட்டுதல் முதலியவைகளேப்பற்றிக் கருதினுர்; சிற்பம், சித்திரம் முதலிய கலேகளேப்பற்றியும் சிந்தித்தார். "வியவசாயம் ஒன்று தவிர மற்றைத் தொழில்களெல்லாம் மறைந்தனவே!" என்று நினேத்து நினேத்து அவர் மனம்வருந்தினுர்; அவரைப் போலவே சிலரும் கருதினுர்கள்.

"'நமக்குத் தேவையான பொருள்கள் நமது நாட்டிலே செய்யப்படவேண்டும். நமது தேவைக்கேற்ற கைத்தொழில்கள் வளரவேண்டும்' என்ற பேச்சு நாட்டில் தோன்றியிருக்கிறது. அந்தப் பேச்-

சுக்கு, 'சுதேசி இயக்கம்' என்ருவது வேறு எந்தப்பெயராவது கொடுத்துக்கொள்ளுங்கள். பெயரைப்பற்றிக் கவலை இல்லை. நமக்குத் தேவையான பொருள்களை நாமே செய்துகொள்ளவேண்டும் என்னும் எண்ணம் நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்ல சகுனமாகும். நம்முடைய நாட்டின் எதிர்காலத்தின் நன்மையும் தீமையும் நம்முடைய உழைப்பைப் பொறுத்துத்தான் இருக்கின்றன. அமெரிக்கர்கள் தங்கள் முயற்சியினுல் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கிருர்கள். ஐரோப்பாவில் உள்ள எல்லா நாடுகளும் கைத்தொழிலில் முன்னேறி இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் தன்முயற்சிதான் காரணம். தன்முயற்சி இல்லாவிட்டால் எந்த வேலையும் நடைபெருது" என்று ரமேசர் கூறியிருக்கின்ருர்.

ரமேசர் "வாசாகைங்கர்ய" மாகப் பேச்சுடன் நின்றுவிடாமல் கைத்தொழில்சம்பந்தமாகச் செயலிலும் காட்டியிருக்கின்ருர். மற்றுமொரு விஷயம் இங்குக் கவனிக்கத்தக்கது. ரமேசர்காலத்தில் வங்காளத்திலும் இந்தியாவின் மேற்குப் பகுதிகளிலும் நமது நாட்டில் செய்யப்பட்ட பொருள்களைப் பெரும்பாலும் பெண்மக்கள் வாங்கி ஆதரித்தார்கள். அதை அறிந்த ரமேசர் "நமது நாட்டுக்கு உண்மையான முன்னேற்றம் வேண்டுமானல், நமது கைத்தொழில் சிறப்படைய வேண்டுமானல், அவைகளுக்கு மூலகாரணமாய் இருப்பவர்கள் பெண் மக்களே ஆவர். ஆகலின், அவர்களுக்குத் தற்கால உலகஅறிவும், தற்கால உலகசரித்திரமும்

போதிக்கப்படல் வேண்டும். பெண்கல்வி வளரா-விட்டால், நாடு நல்ல நிலையை உண்மையானமுறை-யில் அடைந்த தாகாது. நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களைப் பெண்மக்கள் உபயோகிக்கத் தொடங்கினல், அவைகளை ஆண்மக்கள் ஆதரித்தே தீர்வார்கள். ஆகவே, பெண்களுக்கு உண்மை-யான, நல்ல, பூரணமான, சிந்தனையை வளர்க்கக்-கூடிய கல்வியைக் கற்பிக்க வேண்டும் என்று அறிவித்தார். இது எவ்வளவு அனுபவமான வார்த்தை, பாருங்கள்.

---

## 10 நல்ல "திவான்"

ரமேசருக்கு வயது ஐம்பத்தைந் தாயிற்று. அளவு கடந்த உழைப்பின் காரணமாக அவரு-டல் தளர்ந்தது. ஆயினும், அவர் ஓய்வுபெற்-றிருக்க விரும்பவில்லை. அதற்கு ஏற்றாற்போல், தள்ளமுடியாதபடி, அவருக்கு வேலைகள் வந்து-கொண்டிருந்தன.

ரமேசரின் அருமை பெருமைகளைப்பற்றியும், அறிவு, அனுபவம் ஆகிய இவைகளைக்குறித்தும் நன்ருக அறிந்த பரோடா சம்ஸ்தான அரசர் விரும்பி அழைத்து, தமது சம்ஸ்தானத்தின் நிலைமை உயர்த்துவதற்காக, அவரைச் சம்ஸ்தான-த்தின் ரெவினியூ மந்திரிப் பதவியில் அமர்த்தினர். அவர் அந்தப் பதவியில் இருந்த காலத்தில்

பரோடா சம்ஸ்தானத்திற்குப் பல நன்மைகளைச் செய்தார். இன்று பரோடா சம்ஸ்தானம் நல்ல நிலையில் இருப்பதற்குக் காரணமானவர்கள் அனைவரினும் ரமேசர் சிறந்தவர். அவருக்கு எப்போதும் ஏழைகளிடத்திலும் குடியானவர்களிடத்திலும் அளவுகடந்த அன்பு உண்டன்றோ! ஆகலின், அவர் பரோடா சம்ஸ்தானத்தில் உள்ள குடியானவர்களின் கஷ்டங்களைக் குறைத்தார். பல வரிகளை நீக்கிவிட்டார்; ஏழைகளையும் தொடரக் கூடிய சில வரிகளைக் குறைத்தார்; இதனால் ஏற்பட்ட நஷ்டத்தைச் சரிப்படுத்துவதற்காகப் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார். சம்ஸ்தான மக்களுக்குத் தேவையான பல பொருள்கள் சம்ஸ்தானத்திலேயே செய்யப்பட்டன. அதனால், சம்ஸ்தானத்தின் பொக்கிஷம் நிறைந்தது. தொழிற்சாலைகள் ஏற்பட்டபடியால், எல்லாருக்கும் வேலை கிடைத்தது; ஏழைகளின் கூலி உயர்ந்தது; உயரவே, அவர்களின் வாழ்கைத்தரம் உயர்ந்தது. மக்கள் அனைவரும் ரமேசரை வாயார வாழ்த்தினர்.

நியாயஇலாகாவைத் தனியே பிரித்துவைத்து அதற்கு ஒரு தனிமதிப்புக் கொடுத்தார். பரோடா மக்களுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தினார். ஜில்லா போர்டுகளையும் தாலூக்கா போர்டுகளையும் அமைத்தார். கிராமவாசிகள் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்துகொள்ளுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளை ஒவ்-

வொரு சிராமத்திலும் செய்துவைத்தார். அவர் எந்த வேலையையும் தாம் நேரில் பார்க்காமல் செய்விப்பதில்லை. பரோடா சம்ஸ்தானத்தில் அவர் பார்க்காத இட மில்லை.

மேற்கூறியவாறு பல நன்மைகளையெல்லாம் செய்து, அந்தச் சம்ஸ்தானத்தை விட்டு விலகிய-போது, அவர்பிரிவுக்காக வருந்தாத மக்களே சம்ஸ்தானத்தில் இல்லை என்றால், அது உயர்வு-நவிற்சி யாகாது.

ரமேசர் இந்தியாவிலும் எல்லாவிடங்களுக்கும் சென்றிருக்கிறார். தமிழ்நாட்டில் அவர் சென்னை முதல் இராமேசுவரம்வரையில் சென்று பல இடங்களில் உபந்யாசங்கள் நிகழ்த்தியிருக்கின்றார். இவைமட்டுமல்ல. வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பலுச்சிஸ்தானம், சிந்து, பர்மா, மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம் முதலிய பல மாகாணங்களுக்கும் அவர் சென்றிருக்கிறார்.

ரமேசர் மறுபடியும் பரோடா சம்ஸ்தானத்-திற்கு உழைக்கும்படி நேர்ந்தது; ஆனால், இந்த முறை அவர் சம்ஸ்தானத்தின் பெரிய பதவி-யாகிய திவான்பதவியில் அமர்த்தப்பட்டார். இம்முறையில் அவர் சம்ஸ்தானத்திற்காகப் பல நன்மைகளைச் செய்தார். இருந்தாலும், முதலில் செய்ததைப்போல அவ்வளவு அதிகமான வேலைகளை அவரால் செய்ய முடியவில்லை. அவர் உடல் மிகத் தளர்ந்துவிட்டது.

அளவுகடந்த உழைப்பின் காரணமாக ரமேசருக்கு இருதய நோய் ஏற்பட்டது; உடம்பும் சோர்ந்தது. எத்தனையோ சிகிச்சைகள் செய்யப்பட்டன; குணம் ஏற்படவில்லை. "இந்தியாவின் தவப்புதல்வர், ஏழை பங்காளர், தலைசிறந்த தேசாபிமானி, உயர்ந்த நூலாசிரியர், திறமை உள்ள அதிகாரி, சிறந்த பேராசிரியர், நல்ல இராஜ தந்திர நிபுணர், நல்ல பேச்சாளர், முதிர்ந்த அனுபவசாலி, தேர்ந்த நியாயவாதி, சிறந்த பாஷாபிமானி" என்றெல்லாம் மக்களால் புகழ்ந்து கூறப்பட்ட ரமேசசந்திரதத்தர் ஆயிரத்துத் தொள்ளாயிரத் தொன்பதாம் ஆண்டு நவம்பர் மாதம் முப்பதாந் தேதி இந்த உலகத்தைவிட்டுப் பிரிந்தார். அவர்பிரிவை அறிந்து இந்தியா முழுவதும் கலங்கியது; அயல் நாடுகளும் வருத்தம் உற்றன.

இதுவரையில் ரமேசரின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தவர்கள்மனத்தில் பின்வருங் கருத்துக்கள் தோன்றுதல் கூடும்.

உலகத்தில் தங்களுக்காகவும் பிறருக்காகவும் உழைத்து மேன்மை அடைந்தவர்களுட் பலர் சாதாரண நிலையில் இருந்த குடும்பங்களிலேயே பிறந்தவர்கள் என்பதை நாம் அறிவோம். பிறக்கும் போதே செல்வநிலையில் பிறந்தவர்களுள் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் பிறந்ததும் இறந்ததும் சிலருக்கும் தெரியாது. சிறிது செல்வம் சேர்ந்தவுடனே தங்களைப்போல்

உயர்ந்தவர்கள் ஒருவருமே இல்லை என்று நினைக்கிறவர்கள் நம் ரமேசரைக் கவனிக்கவேண்டும்.

ரமேசர் சாதாரணமாகச் செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். ஆயினும், அவர் தம் செல்வத்தை நினைந்து இறுமாந்திருந்ததில்லை. பொதுவாகச் செல்வத்துடன் கல்வியும் சேர்ந்துவிட்டால், இளைஞர்களேயன்றி வயோதிகர்களும் தருக்கித் திரிவதை நாம் காண்கின்றோம். இயற்கையில் கீழ்மக்களாய் இருப்பவர்களின் செயல் இது. ரமேசர் இயற்கையினாலும் செயற்கையினாலும் மேன்மகனாகவே விளங்கினார். அவர் எந்தக்காலத்திலும் தம் உயர்ந்த வேலையைப்பற்றியோ, செல்வத்தைப்பற்றியோ, கல்வியைப்பற்றியோ பெருமை பாராட்டியதில்லை. அவர் எப்போதும் தம்மை ஒரு சாதாரணமனிதனாகவே எண்ணி வாழ்ந்துவந்தார். அவர்மனத்தில் எப்போதும், "ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும்; ஏழைகளை உயர்த்தவேண்டும்: என்னும் எண்ணமே குடிகொண்டிருந்தது. "நாட்டில் கைத்தொழிலை வளர்க்கவேண்டும். அதன் மூலமாக வேலையில்லாத ஏழைகளுக்கு வேலை கிடைக்கும்படி செய்யவேண்டும்" என்பது அவர் கருத்து. பெரும்பாலும் ஏழைகளாய் இருக்கும் வியவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதும் அவர்கொள்கைகளுள் ஒன்றாகும். அவர் நிவேதிதா தேவி என்னும் அம்மையாருக்கு எழுதிய கடிதம்

ஒன்றில், பின்வருமாறு எழுதியுள்ளார். இது பரோடாவில் அவர் நிலவரி மந்திரியாக இருந்த-போது எழுதியது.

"நான் பரோடாவின் நன்மைக்காகச் சில புது வழிகளை ஏற்பாடு செய்ய நினைக்கிறேன். பரோடா சம்ஸ்தானத்தின் முன்னேற்றத்திற்காக நான் பல புதிய வேலைகளைச் செய்ய எண்ணியுள்ளேன். சிதறிக் கிடக்கும் மனித சக்தியை ஒன்றுசேர்ப்பது என்னுடைய முதல்வேலையாகும். இத்தகைய சக்தி இங்கே உள்ள இளைஞர்களிடத்தில் இருக்கின்றது. பரோடாவின் முன்னேற்றத்திற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ள அவர்கள் ஆயத்தமாய் இருக்கிறார்கள். பரோடா மக்கள் செல்வமும் மகிழ்ச்சியும் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். நான் சில புதிய வேலைகளைப் பொதுமக்களோடு கலந்து செய்ய நினைக்கிறேன். பிறகு என் கருத்துக்களைப் பரோடா அரசருக்குச் சொல்லப் போகிறேன். பரோடாவில் பழமையாக உயர்தர வேலையில் இருப்பவர்கள், நான் எதைச் சொன்னாலும் "அது வழக்கத்திற்கு மாறானது" என்று சொல்லுகிறார்கள். நான் வழக்கத்தைப்பற்றிக் கவலைப்படாமல் வியவசாயிகளுக்கு அதிகப்படியாக விதிக்கப்பட்டுள்ள வரியைக் குறைக்கப் போகிறேன். இங்குள்ள பணக்காரர்களையெல்லாம் ஒருங்கு சேர்த்து அவர்களைக்கொண்டு பல கைத்தொழிற்சாலைகளை ஏற்படுத்தப்போகிறேன்; சட்டசபை ஒன்று ஏற்படுத்தி, அதில் பொது

மக்களுக்கான எல்லா நலன்களைப்பற்றியும் விவாதிப்பதற் கேற்ற வழியை உண்டாக்கப் போகிறேன். எதைச் செய்தாலும் நான் இரகசியமாகச் செய்யப்போவதில்லை..........."

இந்தக் கடிதத்திலிருந்து ரமேசர்எண்ணம் ஏழைக்குடியானவர்களைப்பற்றி எப்படி இருந்தது என்று தெரிகிறதல்லவா !

"ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்; அவர்களின் துன்பத்தைப் போக்கவேண்டும்" என்பதே ரமேசரின் எண்ணங்களுள் முக்கியமானதாகும். ஏழைகளுக்கு உதவி செய்வதென்றால், ரமேசர் தம்முடைய நன்மைகளைக்கூட நினைக்காமல் அதைச் செய்வார்.

ரமேசர் வங்காளத்தில் அரசியல் அலுவலாள ராக வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது, அவர் இருந்த மாகாணத்தில், ஒருமுறை எங்குப் பார்த்தாலும் வாந்திபேதியும் அம்மையும் தாண்டவமாடின. அநேகர் மாண்டனர். அந்தச் சமயத்தில் ரமேசர், தாமே பல இடங்களுக்கும் நேரில் சென்றும், பல நோயாளிகளை நேரில் பார்த்தும் அவர் களுக்குச் செய்யவேண்டிய நன்மைகளை விரைவாகச் செய்தார். அப்போது ஒருவர் ரமேசரைப் பார்த்து, "நீங்கள் இப்படி எல்லா இடங்களுக்கும் நேரில் போவது நல்லதன்று. வாந்திபேதியும் அம்மையும் தொற்றுநோய் என்பது உங்களுக்குத் தெரியாதா ?" என்று சொன்னார்.

உடனே, ரமேசர் அவரைப் பார்த்து, "தெரியும்; தெரிந்துதான் இப்படிச் செய்கிறேன். என் உயிர் எனக்கு எவ்வளவு உயர்வானதோ அப்படியே ஒவ்வொருவருக்கும் அவரவர்உயிர் உயர்வானதுதான். என் உயிருக்குப் பயந்து நான் என் கடமையைச் செய்யத் தவறமாட்டேன்" என்று சொன்னர்.

இதனாலும் ரமேசரின் சிறந்த குணம் நமக்கு நன்ருகத் தெரிதல் கூடும். ரமேசர் பரோடாவில் நிலவரிமந்திரியாய் இருந்த காலத்தில், ஒரு முறை அவர்விருப்பப்படி பரோடாமன்னர் முப்பது இலட்சம் ரூபாய் நிலவரியில் குறைத்துவிட்டார். அதனல், குடியானவர்களுக்கு ஓர் அளவுக்கு நன்மைஉண்டாயிற்று.

நாட்டுப்பற்றும் ஒழுங்கான முறையில் ரமேசரிடம் நிறைந்திருந்தது. "இந்தியாவைப்பற்றி இங்கிலாந்துமக்கள்நன்ருகத் தெரிந்துகொண்டால், நம்மவர்களை அவர்கள் பெருமையாக நினைப்பார்கள்" என்று ரமேசர் நினைத்தார். அதற்காக அவர், இடையில் இரண்டொருமுறை இந்தியாவுக்குக் குறைந்த காலஅளவில் வந்தது தவிர, சுமார் ஏழு ஆண்டுகள்வரையில் இங்கிலாந்தில் தங்கி நம்மனேரைப்பற்றி அடிக்கடி சொற்பொழிவு நிகழ்த்திக்கொண்டிருந்தார். "படிக்கும் மாணக்கர்களின் மனத்தில் நமது நாட்டின் உயர்ந்த எண்ணங்களைப் புகுத்தவேண்டும்; அதனல் நன்மை

உண்டாகும்'' என்று ரமேசர் நினைத்தார். அதனால் அவர் இலண்டன் யூனிவர்ஸிடி கல்லூரியில் இந்தியவரலாற்றுச் சொற்பொழிவாளராய் இருந்து நமது நாட்டைப்பற்றி, படிக்கும் ஆங்கிலமாணக்கர்கள் உயர்வாக நினைக்கும்படி செய்துகொண்டிருந்தார். ''மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மர்மமில்லை; திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்னும் எண்ணத்தை நிறைவேற்றி, ரமேசர் உண்மையான நாட்டுப்பற்றுள்ளவராயும் விளங்கினர்.

''பிறருக்காக உழைக்கவேண்டும்; நம் நாட்டைப்பற்றிப் பிறநாட்டார் உயர்வாக நினைப்பதற்கான வேலைகளைச் செய்யவேண்டும். நாட்டுமொழியினிடத்திலே ஒவ்வொருவரும் மதிப்புள்ளவர்களாய் இருக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஒவ்வொருவரும் ஓயாமல் நல்ல வேலைகள் சிலவற்றையாவது செய்யவேண்டும்'' என்பவைகளே ரமேசரின் எண்ணங்களுள் முக்கியமானவைகளாகும். இவைகளே அவருடைய குணாதிசயங்களுட் சிறந்தவைகளுமாகும்.

ரமேச சந்திர தத்தர் (Romesh Chunder Dutt) என்னும் பெயரினை யுடைய வங்கநாட்டு வேளாளரின் வாழ்க்கை வரலாறு இதனோடு ஒருவாறு முடிவுறுகின்றது. ரமேசர் சாதாரணமாகச் செல்வம் உள்ள குடும்பத்தில்தான் பிறந்தார்

என்று சொல்லவேண்டும். ஆனாலும், அவர் செல்வச்செருக்குக் கொள்ளாமல் பல துறைகளிலும் உழைத்து முன்னுக்கு வந்தார் என்பது, இதுவரையில் இதைப் படித்தவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவரைப்போன்ற உண்மையான உழைப்பாளர்களினால்தான் நாடு நிலையான முன்னேற்றத்தை அடைய முடியும். மாணாக்கர்கள் ரமேசரைப்போல ஊக்கத்தோடு நல்ல துறைகளில் உழைப்பார்களானால், அவர்களுக்கும் நாட்டுக்கும் எவ்வளவோ நன்மை உண்டாகும். "ரமேசரின் சுறுசுறுப்பும் உழைப்பும் மறக்கக் கூடியனவல்ல" என்பது முக்காலும் உண்மை. நம் நாட்டு மாணாக்கர்கள் ரமேசரின் வழியைப் பின்பற்றி நலமடைவார்களாக.

---